மலர் - 26 / இதழ் -08/ஆகஸ்ட் 2025
Volume -26/Issue - 08/August 2025
தமிழ் மாத இதழ்/தனிப்பிரதி ரூ.20/-
Tamil Monthly/Per Copy Rs.20/-

# வளரும் விண்ணரசு
VALARUM VINNARASU

## நரகத்திற்குப் போன பிறகு ஊழிய வாஞ்சையா? அது ஒரு போதும் முடியாது!



## வாசகர்களுக்கு சுதந்திர தின வாழ்த்துகள்

# பொதுச்சேவகரிடமிருந்து...

கிறிஸ்துவுக்குள் அன்பான வளரும் விண்ணரசு வாசகர்களுக்கு,

ஆண்டவர் இயேசுவின் திருநாமத்தில் வாழ்த்துக்கள்.

**உங்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியான இந்திய சுதந்திர தின வாழ்த்துகள்.**



செல்லப்பம்பாளையத்தில் நடைபெற்ற வாலிபர் கூடுகையில் கலந்து கொண்டவர்கள்

அன்னியர் கையில் அடிமைத்தனத்திற்குட்பட்ட நம்மை விடுவிக்க, நமது நாட்டின் விடுதலைப் போராட்ட வீரர்கள் போராடி விடுதலை பெற்றுத் தந்தனர். அதேபோல, பாவம் (Sin) ஒரு மனிதனை அடிமையாக்குகிறது என்று வேதத்தில் வாசிக்கிறோம். அந்த பாவ அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற, பாவ அடிமைத்தனத்தை வெற்றி கொண்ட, உலக இரட்சகர் இயேசு கிறிஸ்து நம் நாட்டிற்கும் தேவை.

அந்த மீட்பரை அறிவித்து, இந்தியர்களை அவரது சீடர்களாக உருவாக்கும் ICGM போன்ற அருட்பணி நிறுவனங்களுக்காக தவறாமல் ஜெபியுங்கள்.

ஜூலை 12ஆம் தேதி இந்திய திருச்சபை வளர்ச்சி மிஷனின் செயற்குழுக் கூட்டம் சென்னையில் நடைபெற்றது.

13ம் தேதி ஞாயிற்றுக்கிழமை அன்று தமிழக-ஆந்திரா எல்லையில் உள்ள தடா என்ற இடத்தில் உள்ள 'ஹெப்ரான் சகோதரர்கள் ஆலயம்' என்ற ஆலயத்தில் அருட்பணி ஊழிய அறிமுகம் செய்து தேவசெய்தி அளித்தேன். அன்று இரவு 10 மணி முதல் நள்ளிரவு ஒரு மணி வரை



சென்னையில் நடைபெற்ற வடகிழக்கு கிறிஸ்தவ ஐக்கியத்தின் (Northeast Christian Fellowship) ஆங்கில ஆராதனையிலும் தேவசெய்தி கொடுத்தேன்.

மத்திய பிரதேச மாநிலத்தில் உள்ள பைக்கா (Baiga) இன மக்கள் நடுவே ஊழியம் செய்வதற்கான, ஊழியர்களுக்கான பயிற்சிக் கூட்டம் ஜூலை 14-15 ஆகிய தேதிகளில் சென்னை அலுவலகத்தில் நடைபெற்றது.

சுயசார்பு திருச்சபைகளை உருவாக்குவது எப்படி? என்பது குறித்த அறிமுகக் கூட்டம், சென்னையில் உள்ள ஏபிசி (Arise and Build Christian Fellowship) அலுவலகத்தில் ஜூலை 16ஆம் தேதி நடைபெற்றது. ஏபிசி ஊழியர்களிடையே சுயசார்பு திருச்சபைகளை ஆரம்பித்து, நடத்துவதுப் பற்றிப் பேசினேன்.



புதிதாக இணைந்த அருட்பணியாளர்கள்

ஜூலை 19ஆம் தேதி கோயம்புத்தூர் அருகில் உள்ள கிணத்துக்கடவில், அருட்பணி ஆதரவாளர் கூடுகை நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு சிறப்பித்த ஒவ்வொரு பங்காளரையும் வாழ்த்துகிறேன். அருட்பணி ஊழியத்தைத் தாங்கும் உங்கள் ஒவ்வொருவரையும் ஆண்டவர் ஆசீர்வதிப்பாராக!.

ஜூலை 20ஆம் தேதி, கிணத்துகடவிலுள்ள அருள்நாதர் ஆலயத்தில் (TELC) அருட்பணி ஊழியப் பகிர்வுக்குப் பின், தேவசெய்தி அளிக்க ஆண்டவர் கிருபை செய்தார். சபைப் போதகர்

தொடர்ச்சி கடைசிப் பக்கம் பார்க்க...

நிறுவனர்
டாக்டர். N.J. ஞானையா

ஆசிரியர் குழு:

அருள்திரு.G. பொன்னுராஜ்
அருள்திரு. இம்மானுவேல் பாண்டி
திரு. இரா. பாலசுப்பிரமணியன்
திரு.V.S. தம்பிராஜ்
திருமதி. ரேணுகா பிரின்ஸ்


## இதழின் உள்ளே...


| | |
|---|---|
| அருட்செய்தி! | 04 |
| கனவு காண வா! | 08 |
| துதித்து மன்றாடுவோம்! | 11 |
| மறக்கமுடியாத அருட்தொண்டர்கள் | 21 |
| ஜுலை மாத வினா-விடைகள்... | 30 |
| வேதாகமத்தின் பக்கங்களிலே ... | 31 |
| வாலிபர் பகுதி | 34 |
| சரியான விடை எழுதியவர்கள் | 36 |
| வேத வினாக்கள் | 37 |
| நடப்புச் செய்திகள் | 38 |


| | ஆண்டு சந்தா | ஆயுள் சந்தா |
|---|---|---|
| இந்தியா : | ₹200/- | ₹1500/- |

**சந்திக்கப்படாத மக்கள் கூட்டங்களை சந்தித்து சீடராக்கும் ஊழியத்திற்கு காணிக்கை அனுப்ப வேண்டிய முகவரி**


**ICGM**

**58/1 முத்தாலம்மன் கோயில் தெரு, சேலையூர், சென்னை- 600 073.**

வளரும் விண்ணரசு குறித்த விபரங்களுக்கு
தொடர்பு கொள்ள அலைபேசி : 9003916480
ICGM Land Line: (044)2229 1045

contacticgm@gmail.com


# இந்திய திருச்சபை வளர்ச்சி மிஷன்

**தரிசனம்:** (Vision Statement)

நமது இந்திய நாட்டின் அனைத்து மாநிலங்களில் வாழும் ஒவ்வொரு மக்கள் கூட்டத்திலும் சாட்சியுள்ள சுயசார்புள்ள திருச்சபைகள்.

**வேத ஆதாரம்:** (வெளி. 7:9)

"இவைகளுக்குப்பின்பு, நான் பார்த்தபோது, இதோ, சகல ஜாதிகளிலும் கோத்திரங்களிலும் ஜனங்களிலும் பாஷைக்காரரிலுமிருந்து வந்ததும், ஒருவனும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள், வெள்ளை அங்கிகளைத் தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து, சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக் குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கக் கண்டேன்."

**செயல்திட்டம்:** (Mission Statement)

இயேசு கிறிஸ்துவின் சீடர்களாகிய நாம், இந்தியாவில் நற்செய்தி சென்றடையாத, தேவன் வழிநடத்துகிற மக்கள் கூட்டங்களுக்கு, நற்செய்தியைப் பிரசங்கித்து, அவர்களை சீடர்களாக்கி, சாட்சியுள்ள சுயசார்பு திருச்சபைகளை உருவாக்குகின்ற நோக்கத்தோடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

**வேத ஆதாரம்:** (மத்தேயு 28:19-20)

"ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென்."

வளரும் விண்ணரசு பத்திரிகைக்கு செக், டிராப்ட் ஆன்லைன் மூலம் பணம் அனுப்புபவர்கள் கீழ்க்கண்ட வங்கிக்கணக்குக்கு அனுப்பி 94 42 15 04 82 என்ற எண்ணிற்கு குறுஞ்செய்தி அனுப்பவும்.
A/C NAME: IRAI ARASU TRUST, BANK NAME: STATE BANK OF INDIA
A/C NUMBER: 10143136762, IFSC CODE: SBIN0002235

# லாசருவும் ஐசுவரியவானும்: ஓர் அருட்பணிக் கண்ணோட்டம்

Rev.A. லெஸ்லி நாகராஜன்

லூக்கா 16 ஆம் அதிகாரத்தில், நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஒரு நிகழ்ச்சியைச் சொல்லுகிறார். இது ஒரு உவமை அல்ல; லாசரு எனப் பெயர் குறிக்கப்பட்ட ஒரு மனிதருடைய வாழ்க்கையின் நிகழ்ச்சியாகும். இந்த லாசரு, ஐசுவரியவான் ஒருவனுடைய வீட்டின் வாசலருகே கிடந்தார்.(வசனம் 20).

இந்த ஐசுவரியவானுடைய வாழ்க்கை, இறந்த பின்னான வாழ்க்கை மற்றும் இருப்பிடம், லாசருவின் வாழ்க்கை மற்றும் கேட்கப்படாத மிஷனரி ஜெபம் என்ற தலைப்புகளில் சிந்திப்போம்.

### ஐசுவரியவானுடைய வாழ்க்கை:



நிறைய ஐசுவரியம் (சொத்துக்கள்) நிறைந்த ஒரு மனுஷன் இருந்தான். அவன் இரத்தாம்பரமும், விலையேறப்பெற்ற வஸ்திரமும் தரித்து, அநுதினமும் ஆடம்பரமாக வாழ்ந்துகொண்டிருந்தான் என வசனம் 19இல் வாசிக்கிறோம். விலை உயர்ந்த உடை உடுத்தி, சந்தோஷமாக சிறப்பாக வாழ்ந்து கொண்டிருந்தான் என நாம் கூறலாம்.

நிறைய சொத்துக்களுடன் ஆடம்பரமாக அல்லது நிறைவான வசதிகளுடன் சிறப்பாய் வாழ்வது, இயேசு நம்மை நேசிக்கிறார் என்பதற்கு அடையாளம் அல்ல.

நமது நாட்டில் அம்பானியும், அதானியும் மிகப்பெரிய செல்வந்தர்கள் தான். அதனால் அவர்கள் கர்த்தருக்கு பிரியமானவர்கள் எனப் பொருள் அல்ல. பாவத்தை விட்டு மனம் திரும்பிய வாழ்க்கையே நித்தியமான மகிழ்ச்சியின் வாழ்க்கை.

### ஐசுவரியவான் இறந்த பின் பெற்ற வாழ்க்கை:



அந்த ஐசுவரியவான் இறந்து போகிறான். அவன் சென்றடைந்த பாதாளத்திலிருந்து, ஆபிரகாமையும் அவன் மடியிலே தன் வீட்டின் வாசலருகே கிடந்த லாசருவையும் பார்க்கிறான். அங்கே இருந்து ஆபிரகாமிடம் பேசுகிறான். (லூக்கா 16: 27, 28, மற்றும் 30).

30ஆம் வசனத்தில்: மரித்தோரிலிருந்து ஒருவன் அவர்களிடத்திற்குப் போனால் மனந்திரும்புவார்கள் என

வேண்டுவதைப் பார்க்கிறோம். மனம் திரும்பாத தன் சகோதரர் வேதனையுள்ள இந்த இடத்துக்கு வராதபடி, லாசருவை அனுப்பும் எனக் கெஞ்சுவதை நாம் பார்க்கிறோம்.

மனம் திரும்பாமல் வாழ்க்கை வாழ்ந்த இந்த ஐசுவர்யவான், வேதனையில் பாடுபடுவதை இயேசு கிறிஸ்துவே கூறுகிறார்.

**லாசருவின் வாழ்க்கை:**

20ஆம் வசனத்தில் லாசருவைக் குறித்து நாம் வாசிக்கிறோம். அவன் ஒரு தரித்திரன், பருக்கள் நிறைந்தவன், பசியோடு வாழ்ந்தவன். மேலும் நாய்கள் வந்து அவன் பருக்களை (புண்களை) நக்கிற்று.

முதலாம் தூதன் போய், தன் கலசத்திலுள்ளதைப் பூமியின்மேல் ஊற்றிய போது, பிசாசை வணங்குகிறவர்கள் மேல் கொடிய புண் (ஹெல்த்கோஸ்) உண்டாயிற்று என வெளிப்படுத்தின விசேஷம் 16:2இல் வாசிக்கிறோம். லாசரு அனுபவித்த புண்களுக்கும் "ஹெல்த்கோஸ்" என்ற அதே வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. தரித்திரமும், வியாதியும், பசியும், வேதனையும் உள்ள வாழ்க்கை ஒரு மனம் திரும்பின லாசருவுக்கும் அனுமதிக்கப்பட்டது.

இறையியல் கல்லூரியில் படிக்கும் போது, எனக்கு மிகவும் அருமையான நண்பர் ஒருவர் இருந்தார். மிகச் சிறந்த படிப்பாளி. 100 மீட்டர் ஓட்டத்தில் சிறப்பு பரிசு வாங்கியவர். நல்ல நண்பர். நாங்கள் படிப்பை முடித்து ஒரு வருடத்திற்குள்ளாகவே, அவருக்கு ரத்த புற்று நோய் என கண்டறியப்பட்டது. அவருக்கு வேர்வை ரத்தமாக வந்தது. அவரது பட்டப் படிப்பை முடித்து ஒரே வருடத்தில் தேவசமூகமும் சென்று விட்டார். "ஏன் ஆண்டவரே?" எனக் கேட்கும் உரிமை நமக்கு இல்லை. கிரயத்திற்கு கொள்ளப்பட்டவர்கள் ஆண்டவருக்குச் சொந்தம் (1கொரிந்தியர் 6:20).

இரண்டு வாழ்க்கைகளை நாம் பார்த்தோம். இயேசுவை இரட்சகராக ஏற்றுக் கொண்டு விட்டதால் நான் கொடிய விபத்துக்கும், உயிர் வாங்கும் வியாதிக்கும், வறுமைக்கும் விலக்கப்பட்டிருப்பதில்லை என்பது வேதத்தின்படி சரியே.

2 கொரிந்தியர் 11 ஆம் அதிகாரத்தில் (வசனங்கள் 23 முதல் 27) உள்ள பரி.பவுலின் வரிகளைப் பாருங்கள். காவல், மரண அவதி, கல்லால் எறியப்பட்டது, கப்பற்சேதம்; ஆறுகளால், கள்ளரால், சுயஜனங்களால், கள்ளச்சகோதரரால் உண்டான மோசங்கள்; பிரயாசம், வருத்தம், கண்விழிப்பு, பசி, தாகம், உபவாசம், குளிர், நிர்வாணம் போன்ற அவரது பாடுகளின் அறிக்கையும், (2கொரிந்தியர் 11:23-27) "நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது..." 2தீமோத்தேயு4:7-8 என்ற அவரது வெற்றி முழக்கமும் மாபெரும் சவாலை நம் முன் வைக்கின்றன.

நாம் பாடுகளின் மத்தியிலும் பரமனைப் பின்பற்ற ஆயத்தமா?

இந்த வேதப்பகுதியில் இரண்டு வித மரண முடிவுகளைப் பார்க்கிறோம். லூக்கா 16:22இல் லாசருவின் மரணம். தேவ தூதரால் ஆபிரகாமுடைய மடியிலே கொண்டு போய் விடப்பட்டான் என வாசிக்கிறோம். தரித்திரனாக வாழ்ந்து, இறந்து போன லாசருவை தேவ தூதர்கள் ஆபிரகாமுடைய மடியிலே விடுகிறார்கள்.

ஜென்ம சரீரம் விதைக்கப்பட்டு, ஆவிக்குரிய சரீரத்துடன் (1கொரிந்தியர் 15: 49) எழுந்த லாசரு, ஆபிரகாமின் மடியில் வானவருடைய சாயலில் இருந்திருப்பான் என நினைத்துப் பார்க்கிறேன். மேலும், லூக்கா 15:25 இல் அவன் தேற்றப்படுகிறான் எனவும் லாசருவைக் குறித்து வாசிக்கிறோம்.

அதே சமயத்தில், ஐசுவரியவான் இறந்து அடக்கம் செய்யப்பட்டான் என வாசிக்கிறோம். "செல்வம் அநேக சிநேகிதரைச் சேர்க்கும்..." (நீதிமொழிகள் 19: 4) என்று நீதிமொழிகள் புத்தகத்தில் கூறப்பட்ட விதமாக, அநேகர் வந்து ஐசுவர்யவானுடைய அடக்க ஆராதனையில் பங்கு கொண்டிருப்பார்கள். ஒருவேளை, விலை உயர்ந்த சவப்பெட்டியும் செய்திருப்பார்கள். ஒரு நினைவுக் கூட்டமும் நடந்து இருக்கக்கூடும். ஆனால், அவன் சேர்ந்த இடம் பாதாளம் (நரகம்) எனக் கூறப்பட்டிருக்கிறது. அது வேதனையின் இடமாகக் கூறப்பட்டிருக்கிறது.

அவன் தன் கண்களால் பார்க்க முடிந்தது. தூரத்தில் ஆபிரகாமையும் அவன் மடியிலே லாசருவையும் கண்டான் என நாம் வாசிக்கிறோம். பாதாளத்தில் நினைவுகள் இருக்கும். அந்த பணக்காரனால் லாசருவையும் அடையாளம் காண முடிந்தது. பாதாளத்தின் கொடுமை என்னவென்றால்– ஒரு காலத்தில் உணவு துணிக்கைக்காக ஆசையாயிருந்தவன் இப்போது நன்றாக இருக்கிறான் நானோவென்றால் பாதாளத்தில் வேதனைப்படுகிறேனே என்ற நினைவும், கொடுமையான வயிற்று எரிச்சலும்தான்!

**கேட்கப்படாத மிஷனரி ஜெபம்:**

தகப்பனாகிய ஆபிரகாமே என அழைக்கும் இந்த ஐசுவர்யவான், ஆபிரகாமின் மடியில் இருக்கப் போகும் தரித்திரனை (ஆபிரகாமின் மகனை) தீமைகள் அனுபவிக்க விட்டு நன்மைகளை அனுபவித்து வந்தான் என வாசிக்கிறோம்.

26 ஆம் வசனத்தில், "இவ்விடத்திலிருந்து உங்களிடத்திற்குக் கடந்துபோகவும், அவ்விடத்திலிருந்து எங்களிடத்திற்குக் கடந்துவரவும் மனதுள்ளவர்களுக்குக் கூடாதபடிக்கு, எங்களுக்கும் உங்களுக்கும் நடுவே பெரும்பிளப்பு உண்டாக்கப்பட்டிருக்கிறது என ஆபிரகாம் கூறுகிறார். ஐசுவரியவானால் பேச முடிகிறது; கேட்க முடிகிறது. ஆனால், கடக்க முடியாத பாதாளத்தில் இருந்து ஏறெடுக்கப்பட்ட மிஷனரி ஜெபம் அது!

உயிரோடு இருக்கும்போது மனம் திரும்பாமல் வாழ்ந்து விட்டு, பாதாளத்தில் இருந்து கொண்டு ஐந்து சகோதரரைக் குறித்த கரிசனையுடன் அவர்களுக்காக லாசருவை மிஷனரியாக அனுப்பும்படி வேண்டுதல் செய்யும் ஐசுவர்யவானை நாம் 27 மற்றும் 28 வசனங்களில் வாசிக்கிறோம். இது ஒரு காலம் கடந்த ஜெபம்.

நம் மேல் கரிசனையும், பாரமும், அன்பும் நிறைந்த ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, திரளான ஜனங்களைக் கண்டபொழுது, அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போலத் தொய்ந்துபோனவர்களும் சிதறப்பட்டவர்களுமாய் இருந்தபடியால், அவர்கள்மேல் மனதுருகி, தம்முடைய சீஷர்களை நோக்கி: "அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்; ஆதலால், அறுப்புக்கு எஜமான் (அறுவடையின்

எஜமான்) தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள்" என்றார். (மத்தேயு 9:36-38)

இந்த ஜெபத்தை உயிரோடு இருக்கும்போது மாத்திரம் தான் நம்மால் செய்ய முடியும். இப்போது நாம் உயிரோடு இருக்கும் போது மனம் திரும்பி, பாரத்தோடு ஜெபிக்க வேண்டும்.

"தகப்பனாகிய ஆபிரகாமே! தகப்பனே! என மூன்று முறை அழைத்த ஐசுவர்யவானுக்கு ஆபிரகாம்: "தீர்க்கதரிசிகளும் மோசேயும் உண்டு; அவர்களுக்கு செவி கொடுக்கட்டும்" எனக் கூறுகிறார்.

மரித்தோரிலிருந்து ஒருவர் இன்னும் மனம் திரும்பாத அவர்களிடத்திற்குப் போனால், அவர்கள் மனம் திரும்புவார்கள் என ஐசுவர்யவான் கூறியதும், ஆபிரகாம்: "வேத வார்த்தையை நம்பாதவர்கள், இறந்தவர்கள் உயிரோடு எழுந்து சென்றாலும் நம்ப மாட்டார்கள்" எனக் கூறுகிறார்.

அற்புதங்கள் மனிதரை மாற்றுவதில்லை; வேத வார்த்தையே மனிதர்களை மாற்ற வல்லமை உடையது. இறந்து மூன்று நாட்கள் ஆகிய லாசருவையும், நாயீன் விதவையின் மகனையும் உயிரோடு எழுப்பின பிறகு தான், "இயேசுவை சிலுவையில் அறையும்" என மக்கள் சத்தமிட்டார்கள். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கே இப்படிச் செய்வார்கள் என்றால், ஏழை லாசருவின் நிலை எப்படி ஆகும்? தேவ வார்த்தையே வாழ்க்கையே மாற்ற வல்லமை உள்ளது. அற்புதங்களும், அடையாளங்களும் மனம் திரும்புதலுக்கு ஏதுவான மாற்றத்தைத் தர முடியாது.

**நாம் கற்றுக்கொள்ள வேண்டியது என்ன?**

நம் ஆண்டவர் ஆகிய இயேசு கிறிஸ்து கூறின இந்த நிகழ்ச்சியில், பாதாளமும் பரலோகமும் நித்தியமாக நாம் போகும் இடங்கள் என நம்மால் அறிந்து கொள்ள முடிகிறது.

இவ்வுலக ஆசீர்வாதங்கள் மனம் திரும்பாமல் வாழ்பவர்களுக்கும் கிடைக்கும். அவை ஆண்டவரின் ஆசீர்வாதங்களுக்கு அடையாளம் அல்ல. இயேசு கிறிஸ்து (மாற்கு1:15) கூறும் "தேவன் உங்கள் வாழ்க்கையை ஆளுகை செய்ய வேண்டிய நேரம் வந்துவிட்டது; மனந்திரும்புங்கள்" என்பது தேவனுடைய கட்டளையாகும். அப்போஸ்தலர் 17:30இல் கூறப்பட்டபடி, "அறியாமையுள்ள காலங்களை தேவன் காணாதவர்போலிருந்தார்; இப்பொழுதோ மனந்திரும்பவேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார்".

பாவத்தை விட்டு மனம் திரும்புங்கள் என்பது நாம் விரும்பினால் தேர்ந்து எடுக்கும் ஒரு விருப்பத் தேர்வு அல்லது ஒரு வாய்ப்பு அல்ல. அது ஒரு கட்டளை. இப்போது மனம் திரும்பி பாவத்தை விடாவிட்டால், பாதாளத்திலிருந்து மனம் திரும்ப முடியாது.

**மற்றவரைப்பற்றிய கரிசனை இல்லாத வாழ்க்கை மனம் திரும்பாத சுயநல வாழ்க்கை.**

***

**நரகத்திற்குப் போன பிறகு ஊழிய வாஞ்சையா? அது ஒரு போதும் முடியாது!**

கனவு
காண
வா!

தன்வரலாற்றுத் தொடர்

09

# "குடும்பம் ஒன்று சேர்தல்"

(பழைய ஏற்பாட்டு யோசேப்பின் வாழ்க்கை வரலாறு) அறிவு

யோசேப்பாகிய என்னுடைய குடும்பம் விரைவில் எகிப்துக்கு வரப்போகிறது என்ற எண்ணம் என்னை மிகுந்த மகிழ்ச்சிக்குள்ளாக்கியது. பிரிவுகள் எப்போதுமே வேதனையைத் தருவன. அதிலும், நிரந்தரப்பிரிவுகள் இன்னும் அதிக வேதனையைத் தரும்.

என் தம்பி பென்யமீன், பெத்லகேம் (எப்பிராத்தா என்றும் அதற்குப் பெயர் உண்டு) என்னும் ஊரில் பிறந்தான். அவன் பிறந்தபோது, என் தாயான ராகேல் இறந்துவிட்டார். அவர்களை அந்த ஊரிலேயே என் தந்தை அடக்கம் செய்தார்.

நானும் என் தம்பி பென்யமீனும் "தாயில்லாப் பிள்ளைகளாக" வளர்ந்தோம். சில நாட்களில் என் தாயை நினைத்து நான் அழுவேன். அவர்களை இனிமேல் இந்த உலகத்தில் பார்க்கமுடியாதே என்று வருந்துவேன்.

நான் எகிப்துக்கு வந்து பல ஆண்டுகள் ஆகிவிட்டன. எனக்குத் திருமணம் ஆகும்வரை எனக்கு உறவு என்று சொல்லிக் கொள்ள எகிப்து நாட்டில் யாருமே இல்லை. அது பல நாட்களில் எனக்கு மிகுந்த வருத்தத்தைக் கொடுத்ததுண்டு.

நான் போத்திபார் வீட்டில் அடிமையாய் இருந்தபோதும், அவர் மனைவி என்னைப் பழி சுமத்தியதால், குற்றமற்ற நான் சிறைச்சாலையில் இருந்தபோதும், என் குடும்பத்தை நினைத்து நினைத்து அழுத நாட்கள் அதிகம். எப்போது என் தந்தையைக் காண்பேன்? எப்போது என் தம்பியைப் பார்ப்பேன்? என் சகோதரர்களில் மூத்தவரான ரூபன் என்மீது ஒருவகைப் பாசம் உள்ளவர். அவரை எப்போது பார்ப்பேன். மற்றவர்கள் என்னை வெறுத்தாலும், நான் அவர்களை வெறுக்கவில்லை; அவர்களையும் எப்போது பார்ப்பேன் என்னும் எண்ணங்கள் அவ்வப்போது எனக்கு வந்ததுண்டு.



ஆனால், கர்த்தர் என்னோடு இருந்தார். நான் சோர்ந்துபோன வேளைகளில் அவருடைய "பிரசன்னம்" என்னைத் தேற்றியது. அவருடைய அன்புக்கரங்கள் என் கண்ணீரைத்

துடைத்தன.

அவர் படிப்படியாய் என்னை உயர்த்தியதை, என் உள்ளம் உணரத்தொடங்கியது. நம்பிக்கையற்று; மிக மிகத்தாழ்வில் இருந்த என்னை; அவர் பார்வோனுக்கு அடுத்த நிலையில் உயர்த்தினார். அனாதைபோல் இருந்த எனக்கு "ஆஸ்நாத்" மனைவியானாள். இப்போது நான் எனக்கு எந்த உறவும் இல்லை என்று கூறமுடியாது.

அதுமட்டுமல்ல எனக்கு இப்போது இரண்டு மகன்கள்! மூத்தவன் பிறந்ததும் அவனுக்கு மனாசே என்று பெயரிட்டேன். அதன் பொருள் "மறக்கடிக்கச் செய்பவன்" என்பதாகும். ஆம்! அவன் என் தகப்பன் குடும்பத்தை மறக்கச் செய்தான். அவனுடைய குழந்தைச் சிரிப்பும், அழுகையும், அவன் "குறுகுறு" என்று செய்யும் செயல்களும் என்னைப் பரவசப்படுத்தின. அவனுக்குப்பின்னால் இரண்டாவது மகனான "எப்பிராயீம்" பிறந்தான். எப்பிராயீம் என்றால் "பலுகிப் பெருகுதல்" என்று பொருள்படும். சிறுமைப்பட்டவனாக இருந்த என்னை, இந்த நாட்டில் உயர்த்தி, பலுகப்பண்ணியதை நினைத்து, அந்தப்பெயரை அவனுக்கு வைத்தேன். இப்போது, எனக்கு என்று ஒரு குடும்பம் இருக்கிறது. ஆனால், சீக்கிரமாக என் தந்தை வரப்போகிறார். அவருடன் என் பழைய குடும்பமும் வரப்போகிறது.

ஒரு நாள் என் அண்ணன் யூதா வந்தார். அவர் சொன்னார்: நம் தந்தை யாக்கோபும் மற்றவர்களும் மெதுவாக வந்து கொண்டிருக்கின்றனர். கோசேன் நாட்டில் உன்னைச் சந்திக்க அவர் விரும்புகிறார் என்றார்.

நான் உடனே என் இரதத்தை ஆயத்தம் செய்யச் சொன்னேன். கோசேன் நாட்டை நோக்கி விரைந்தேன்.

**யாக்கோபு- இப்போது அவர் பெயர் இஸ்ரவேல்.**

முதுமையின் தளர்ச்சி, மனதின் பாரங்கள் அவர் உருவத்தைக் கொஞ்சம் பாதித்திருந்தன. ஆனாலும், அதே ஒளிவீசும் கண்கள். ஆபிரகாமின் பேரன்; ஈசாக்கின் மகன்; விசுவாச வரலாற்றை உருவாக்கும் தலைமுறைகள் அவை. இரதத்திலிருந்து இறங்கி ஓடினேன். அவரைக் கட்டிப்பிடித்தேன்.

கண்கள் அருவியாகக் கொட்டின. அவரும் தேம்பி,தேம்பி அழுதார். எங்கள் குடும்பமும் அழுதது. எகிப்தின் பணியாட்கள் அமைதியாக, இந்த உருக்கமான சந்திப்பைப் பார்த்துக்கொண்டிருந்தனர்.

வெகு நேரம் கழித்து என் தந்தை பேசினார்: "யோசேப்பு! நீ இன்னும் உயிரோடிருக்கிறாயே. நான் உன் முகத்தைப் பார்த்துவிட்டேன். எனக்கு இப்போது மரணம் வந்தாலும் வரட்டும்" என்றார்.

நான் சொன்னேன்: "அப்பா, இப்போது சாவு பற்றிப் பேசவேண்டாம். இங்கே நீங்களும் மற்றவர்களும் சாக வரவில்லை–வாழவே வந்திருக்கிறீர்கள். உங்களையும், மற்றவர்களையும் இந்தக் கொடிய பஞ்சகாலத்தில் காப்பாற்றி வாழ

வைக்கவே, ஆண்டவர் என்னை இங்கே கொண்டுவந்து உயர்த்தி வைத்திருக்கிறார்" என்றேன்.

எல்லோரும் என் வீட்டிற்கு வந்தார்கள். நன்றாகச் சாப்பிட்டபின் உட்கார்ந்தோம். அப்பா (இஸ்ரவேல் என்னும் யாக்கோபு) பேசினார்.



என் தாத்தா ஆபிரகாமும், என் தந்தை ஈசாக்கும், ஆண்டவரால் எகிப்துக்குப் போகவேண்டாம் என்று எச்சரிக்கப்பட்டனர். ஆகவே யோசேப்பாகிய நீ எங்களை அழைத்தபோது அந்த தேவனின் திட்டம் அறிய பெயர்செபா என்னும் இடத்திற்கு சென்றோம். அங்கே ஈசாக்கின் தேவனுக்குப் பலி செலுத்தினேன். அன்றிரவு இஸ்ரவேலின் தேவன் என்னை 'யாக்கோபே, யாக்கோபே' என்று அழைத்தார். நான் "இதோ அடியேன்" என்றேன்.

அப்போது அவருடைய தெளிவான குரல் ஒலித்தது: நான் தேவன்; நான் உன்னுடைய தகப்பனுடைய தேவன்; நீ எகிப்துக்குப்போகப் பயப்படவேண்டாம். அங்கே உன்னைப் பெரிய இனமாக வளரச் செய்வேன். நான் உன்னுடனே வருவேன். நான் உன்னைத் திரும்பவும் வரப்பண்ணுவேன். யோசேப்பு தன் கையால் உன் கண்களை மூடுவான் என்றபோது, யோசேப்பாகிய என் கண்களில் கண்ணீர் வந்தது.

மன்னர் பார்வோனிடம் சில சகோதரர்களை அறிமுகம் செய்தேன். பார்வோன் மகிழ்ச்சியுடன் என்னைப்பார்த்து, "நாட்டின் சிறப்பான இடத்தில் அவர்களைக்குடியேற்று. அவர்களுக்கு என் ஆடு மாடுகளைக் கவனிக்கும் பணியையும் கொடுக்கலாம்" என்றார்.

பின்பு என் தந்தையையும் பார்வோனிடம் அழைத்துச் சென்றேன். பார்வோன் அவரிடம் "உமக்கு வயது என்ன?" என்று கேட்டார். யாக்கோபு அவரிடம், "நான் பரதேசியாய் (நிலையின்றி) வாழ்ந்த நாட்கள் 130 ஆண்டுகள். ஆனால், அவை துன்பங்களால் நிறைந்தவை. அவை எண்ணிக்கையில் என் முன்னோர்களை விடக்குறைந்தவை" என்றார். பார்வோனை அவர் வாழ்த்தி ஆசீர்வதித்தார்.

பார்வோனின் ஆணைப்படி எகிப்தின் நல்ல இடமான ராமசேஸ் என்னும் இடத்தில் அவர்களைக் குடியேற்றினேன். எங்கள் குடும்பம் ஒன்று சேர்ந்துவிட்டது. என் இளமைக்கனவுகள் இப்போது நனவாகி விட்டன.

ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும், யாக்கோபு என்னும் இஸ்ரவேலின் தேவனுமான அந்த உண்மை தேவன் இதை வாய்க்கச்செய்தார். அவருக்கே துதி உண்டாவதாக.

**கனவுகள் தொடரும்...**

*****

# துதித்து மன்றாடுவோம்

## தமிழ்நாடு

ஆகஸ்ட்-1

### கள்ளக்குறிச்சி மாவட்டம்

**அருட்பணியாளர்: திரு. காவியகாந்த்**
**திருமதி.செல்வி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட வெள்ளிமலை, கென்டிக்கல் ஆகிய கிராமங்களுக்காக, சிறுவர் ஊழியத்தின் மூலம் சந்திக்கப்பட்ட 15 பிள்ளைகள் மாலைநேர வகுப்பில் கலந்து கொள்வதற்காகத் துதிப்போம். பாண்டியன், சந்தியா ஆகியோர் இரட்சிக்கப்பட, செல்வம் போதைப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற–இரட்சிக்கப்பட, வெளிமாநிலத்திற்கு வேலைக்கு சென்றுள்ள விசுவாசிகள் பாதுகாக்கப்பட– சத்தியத்தில் வளர ஜெபிப்போம்.

### கடலூர் மாவட்டம்

**அருட்பணியாளர் : திரு. M. லிங்கம்**
**திருமதி. கலா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட அருகேரி, பொன்னேரி ஆகிய கிராமங்களுக்காக, திருமுழுக்கு எடுக்க ஆயத்தமாக உள்ள வீரமணி, விக்கி, வளர்மதி, மோனிஷா ஆகியோர்களுக்காக, சுமித்ரா பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற்றதற்காக, நற்செய்தியை ஆர்வமாக கேட்ட விக்னேஸ்வரன், பரமசிவம், சடையக்கா, ஆல்வின், ரித்திகா, வைஷ்ணவி, சுவாதி, சுகந்தி ஆகியோருக்காகத் துதிப்போம். சிறுவர் ஊழியத்தில் சந்திக்கப்பட்ட குழந்தைகள் மறுபடியுமாக சபைக்கு வர, பரமசிவம் நிறைவான சுகம் பெற, ராஜா குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற, பொன்னேரியில் நடைபெறும் ஊழியம் வளர்ச்சி அடைய ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு. V.சிவராமன்**
**திருமதி. பெரியநாயகி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சுமைதாங்கி, கொசப்பள்ளம் ஆகிய கிராமங்களுக்காக, சந்திரா சரீர பெலவீனத்திலிருந்து சுகம் பெற்றதற்காக, பானு குடும்பத்திற்கு தேவன் கொடுத்த சமாதானத்திற்காகத் துதிப்போம். ராஜமாணிக்கத்திற்கு ஒரு கண்ணில் பார்வை கிடைக்க, வேல்முருகனுக்கு வெளிநாடு வேலை வாய்ப்பு கிடைக்க ஜெபிப்போம்.

ஆகஸ்ட்-2

### நாமக்கல் மாவட்டம்

**அருட்பணியாளர் : திரு. S. சாமுவேல்**
**திருமதி. ரோகிணி**

நற்செய்தி அறிவிக்க பட்ட மோகனூர், வண்டிகேட் ஆகிய கிராமங்களுக்காக, சிறுவர் ஊழியத்தில் பங்கு கொள்ளும் சிறுவர்கள் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டதற்காகத் துதிப்போம். நற்செய்திகேட்ட காயத்ரி, காளியம்மாள், இலக்கியா, மோகனப்பிரியா ஆகியோர் விசுவாசத்தில் வளர ஜெபிப்போம்.

### ஈரோடு மாவட்டம்

**அருட்பணியாளர்:**
**திரு.G.தனம் யோகராஜ் – திருமதி.டான்சி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சென்னம்பட்டி, குருவை ஆகிய கிராமங்களுக்காக, குருவைப் பகுதியில் சுபாஷ் வீட்டில் ஜெபக்குழு ஆரம்பிக்கப்பட்டதற்காக, சரஸ்வதி வசனத்தில் பலப்பட்டு திருமுழுக்கு எடுக்க ஆயத்தமாயிருப்பதற்காக, கண்ணன் நற்செய்தியை ஏற்றுக் கொண்டதற்காகத் துதிப்போம். மூங்கில்பாளையத்தில் வாலிபர் குழு ஆரம்பிக்கப்பட, ராஜேந்திரன் திருமுழுக்கு எடுக்க, ரெட்டிபாளையம் பகுதியில் சிறுவர் ஊழியம் ஆரம்பிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு. அதிசய அமலன்**
**திருமதி. ஆனந்தி விமலா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட ஆண்டிப்பாளையத்திற்காக, அன்னக்கொடி

குடும்பத்திற்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டதற்காக, தீபாவிற்கு அரசு கல்லூரியில் இடம் கிடைத்ததற்காக, ஈஸ்வரி: வாலிபர்கள்–சிறுவர்கள் நடுவில் நற்செய்தி அறிவிக்க ஆர்வம் காட்டுவதற்காகத் துதிப்போம். நாகம்மாள் லீதியாளுக்கு நிறைவான சுகம் கிடைக்க, முருகன்–அன்னக்கொடி விசுவாசத்தில் வளர, ராதிகாவிற்கு சுகப்பிரசவம் கிடைக்க, பின்மாற்றத்தில் உள்ள மரகதம், கீதா, வரதாச்சலம், ராஜன், மாரப்பன், சுரேஷ், பெரியசாமி பேச்சி, அம்மாவாசை ஆகியோர் குடும்பமாக ஆலய ஆராதனையில் கலந்து கொள்ள, ஊழியத்தை தாங்குபவர்கள் எழும்ப, பாப்பாத்தி வீட்டில் நடைபெறும் ஜெபக்குழு ஆசீர்வாதமாக நடைபெற ஜெபிப்போம்.

## கோயம்புத்தூர் மாவட்டம்

**ஆகஸ்ட்-3**

### சுயசார்புத் திருச்சபை

**அருட்பணியாளர் : திரு. லூர்டஸ்**
**திருமதி. கிளாடிஸ்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பில்சின்னம்பளையம், குள்ளேகவுண்டனூர், உப்பிலியனூர், பூவலப்பருத்தி, சமத்தூர், கோட்டூர், அரசூர், மஞ்சநாயக்கனூர், அங்கலகுறிச்சி, கணபதிபாளையம் ஆகிய கிராமங்களுக்காக, பாலு, மணிகண்டன், குமார், ராஜகாளி, கலை ஆகியோர் நற்செய்தியை ஏற்றுக்கொண்டதற்காக, கோரேஷ் திருமணம் சிறப்பாக நடைபெற்றதற்காகத் துதிப்போம். நற்செய்தியை ஏற்றுக்கொண்டவர்கள் இரட்சிக்கப்பட, நான்சிக்கு சுகப்பிரசவம் கிடைக்க, மார்த்தாள் (இருதய பலவீனம்–மஞ்சள்காமாலை), சாராவின் தாய் (மூட்டு வலி) ஆகியோர் நிறைவான சுகம் பெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு.எபிநேசர் உவைட்**
**திருமதி. மேரி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட தொண்டாமுத்தூர் கிராமத்திற்காக, சாமுவேலுக்கு கல்லூரியில் சலுகை கட்டணத்தில் இடம் கிடைத்ததற்காக, ரம்யாவுக்கு தேவன் கொடுத்த ஆண் குழந்தைக்காக, கார்த்திக் புற்று நோயிலிருந்து சுகம் பெற்றதற்காகவும் துதிப்போம். ஆபிரகாம் குடும்பத்தில் சமாதானம் கிடைக்க–கடன் பிரச்சனையிலிருந்து விடுதலை பெற, தினேஷ், பிரேம் ஆகியோருக்கு வேலை கிடைக்க, சுமதி, மணியன், கிருபை ஆகியோர் நிறைவான சுகம் பெற, பின் தொடர் பணியில் உள்ள ஜெயக்குமார், வில்லியம்ஸ், கார்த்திக் சுமதி ஆகியோர் குடும்பங்கள் இரட்சிக்கப்பட, நாத்தான்வேலுக்கு விரைவில் திருமணம் நடைபெற–தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.

### சுயசார்புத் திருச்சபை

**அருட்பணியாளர் :**
**திரு. இம்மானுவேல் கிளமென்ட் கிப்ட்சன்**
**திருமதி. செல்லாண்டீஸ்வரி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட நாட்டுக்கல்பாளையம் கிராமத்திற்காக, பவுலுக்கு நீண்ட நாட்களாக தடைபட்டிருந்த கண் அறுவை சிகிச்சை நடைபெற்றதற்காக, பார்வதி அம்மா தலைசுற்றல் நோயிலிருந்து சுகம் பெற்றதற்காக, வனிதா, நிவேதா, ஜீவிதா, ஏஞ்சலா ஆகியோர் புதிதாக ஆலயம் வருவதற்காகத் துதிப்போம். வசந்தி இரட்சிக்கப்பட, மயிலாத்தாள் நிறைவான சுகம் பெற, நந்தகுமாருக்கு விரைவில் திருமணம் நடைபெற, சந்தோஷ் மனநோயிலிருந்து சுகம் பெற, துர்கா கணவருடன் இணைந்து வாழ ஜெபிப்போம்.

**ஆகஸ்ட்-4**

**அருட்பணியாளர் :**
**திரு. R. ஸ்டீபன் செல்வகுமார்**
**திருமதி. கரோலின்**

நற்செய்தி அறிவிக்கப் பட்ட வாழைக்கொம்பு கிராமத்திற்காக, திருமுழுக்கு எடுக்க ஆயத்தமாக உள்ள பூங்கொடி, தீனா, பழனி, அருக்காணி, மாரியம்மாள், மாரா ஆகியோருக்காக, செல்வராஜ், ஜோதி ஆகியோர் ஆராதனையில் கலந்து கொண்டதற்காக, கலைவாணன், மைதிலி, மாரப்பன், சுதாகர், தங்கம்மாள், கன்னீஸ்வரி, சந்திரா ஆகியோருக்கு நற்செய்தி

அறிவிக்கப்பட்டதற்காக, சுந்தரி புதிய தொழில் தொடங்க தேவன் செய்த கிருபைக்காகத் துதிப்போம். மாசிலாமணிக்கு நிறைவான சுகம் பெற, நாகூர் புதிய காலனியில் சீடத்துவ பயிற்சி ஆரம்பிக்கப்பட, ஆர்த்திக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, ஆலயம் கட்ட இடம் வாங்கப்பட ஜெபிப்போம்.

**திருப்பூர் மாவட்டம்**

**அருட்பணியாளர்: திரு. S. பால்ராஜ்**
**திருமதி. மரியாள்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட குருணைக்கல்பட்டி கிராமத்திற்காக, வேல்விழி கர்ப்பப்பை நோயிலிருந்து சுகம் பெற்றதற்காக, விடுமுறை வேதாகமப் பள்ளியில் கலந்து கொண்ட பிள்ளைகள் பின் தொடர் பணி மூலமாக சந்திக்கப் படுவதற்காகத் துதிப்போம். ரவியின் வீடு கட்டுமானத் தேவைகள் சந்திக்கப்பட, மாயகிருஷ்ணனின் திருமணத் தேவைகள் சந்திக்கப்பட, தமிழ்ச்செல்வி கடன் பிரச்சனையிலிருந்து விடுதலை பெற, நிவாஸ், ராமசாமி, ரவி, மதியழகன் ஆகியோர் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு.G. பால்துரை**
**திருமதி. ஜெபரூபி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பாப்பாவலசு, சுள்ளிப்பெருக்கிபாளையம் ஆகிய கிராமங் களுக்காக, ஐந்து வருடமாக குழந்தை இல்லாமல் இருந்த பிரியாவிற்கு தேவன் குழந்தை பாக்கியத்தை கொடுத்ததற்காக, சண்முகம் எழுந்து நடக்க கர்த்தர் உதவி செய்ததற்காகத் துதிப்போம். ஆபிரகாம்–சாராள் (16 வருடம் குழந்தை பாக்கியமில்லை) தம்பதிக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, சுந்தரம் இருதய பலவீனத்திலிருந்து சுகம் பெற, அருக்காணி, செல்வி, தமிழரசி ஆகியோர் இரட்சிக்கப்பட, ஆலய ஓய்வறை சீரமைக்கப்பட, சபையின் வாலிபர்கள் பரிசுத்தமாக வாழ, செல்விக்கு (33 வயது) விரைவில் திருமணம் நடைபெற ஜெபிப்போம்.





**அருட்பணியாளர் :**

**அருள்திரு. சாலமோன்ராஜ்**
**திருமதி. ஜெயக்கொடி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட செல்லப்பம்பாளையம், தேவனூர் புதூர் ஆகிய கிராமங்களுக்காக, நற்செய்தி கேட்ட ஜனங்கள் இரட்சிக்கப்பட, ராமன் நிலத்தில் ஆழ்துளைக்கிணறு போடப்பட்டு நல்ல தண்ணீர் கிடைத்ததற்காக, முருகவேல் தோல் நோயிலிருந்து சுகம் பெற்றதற்காக, நல்லம்மாள், அருள்மணி, அங்கம்மாள், லட்சுமி, வெஜிலா, லட்சுமணன் ஆகியோர் புதிதாக ஆலயம் வந்ததற்காக, ராஜ்குமார்–மோனிஷா, தங்கராஜ்–பத்மா, செல்வன்–காளிஸ்வரி ஆகியோர் திருமணம் நல்லமுறையில் நடைபெற்றதற்காக, கவிதா, எஸ்தர், மஞ்சுளா, கிருபா ஆகியோரின் தடைபட்ட வீட்டு வேலைகள் முடிவடைந்ததற்காகத் துதிப்போம். ஹரிகிருஷ்ணனுக்கு விபத்தினால் ஏற்பட்ட கால் புண்ணிலிருந்து சுகம் பெற, குடும்பத்தை பிரிந்து வாழும் மல்லிகா, கோபால், சரவணன், ஆறுசாமி ஆகியோர் இணைந்து வாழ, செல்வி, ரங்கம்மாள், காளியம்மாள் ஆகியோர் பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற, வாசுதேவன், மாணிக்கம், புஷ்பராஜ் ஆகியோர் புற்று நோயிலிருந்து சுகம் பெற ஜெபிப்போம்.

**திருச்சி மாவட்டம்**

**அருட்பணியாளர் : திரு. S.ஜெயக்குமார்**
**திருமதி. மரிய செல்வம்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட உப்பிலியாபுரம், வெங்கடாசலபுரம், சிக்கந்தப்பூர்பாளையம், சிக்கந்தப்பூர்சோபனபுரம், கொட்டம்பட்டி, மங்கபட்டி, வைரசெட்டிபாளையம், மாராடி, ஒக்கரை, புதுப்பட்டி ஆகிய கிராமங்களுக்காக, ஆரோக்கியசாமிக்கு கிடைத்த சுகத்திற்காக, தருண் விபத்தில் இருந்து பாதுகாக்கப்பட்டதற்காக, அலமேலு குடும்பம் விஷப்பாம்பு கடியிலிருந்து பாதுகாக்கப்பட்டதற்காக, விக்டோரியாராணி

நிலப்பிரச்சினை சமாதானமாக முடிவுக்கு வந்ததற்காக, அஸ்வின்சாமிக்கு வேலை கிடைத்ததற்காகத் துதிப்போம். அலமேலு நிலப்பிரச்சினை சமாதானமாக முடிய, நற்செய்திக்கு ஆர்வம் காட்டும் கலைச்செல்வன், ராஜா, அமுதா, கண்ணகி, செல்வி ஆகியோருக்காக, சந்திரபோசுக்கு ஏற்ற வாழ்க்கைத் துணை கிடைக்க, பிரிட்டோவின் வியாபாரம் ஆசீர்வதிக்கப்பட, ஜெயராஜ், அருமை நாயகம் விசுவாசத்தில் வளர, ஊழியருக்கு வீடு விரைவாக கட்டி முடிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**
**திரு.B. தினேஷ் - திருமதி. எமீமா பியூலா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கீழ்குறிச்சி, பொன்மலைப்பட்டி ஆகிய கிராமங்களுக்காக, ஊழியரின் தாயாருக்கு அறுவை சிகிச்சை முடிந்து சுகம் பெற்றதற்காக, ஊழியரின் மனைவிக்கு பித்தப்பை அறுவைச்சிகிச்சை நல்லமுறையில் நடைபெற்று சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். ரவி முத்துவுக்கு சுகப்பிரசவம் கிடைக்க, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**மதுரை மாவட்டம்**

**அருட்பணியாளர் : திரு. வின்சென்ட்**
**திருமதி. பவுலின் கிரேஸ்**

ஆகஸ்ட்-6

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சின்னவாகைக்குளம், முண்டுவேலம்பட்டி ஆகிய கிராமங்களுக்காக, சபையின் மூப்பர் தங்கமாயனுக்கு கண் அறுவை சிகிச்சை நல்லமுறையில் நடைபெற்றதற்காக, அமுதா தலைவலியிலிருந்து சுகம் பெற்றதற்காக, செந்திலுக்கு இருதய அறுவை சிகிச்சை நல்லமுறையில் நடைபெற்றதற்காகத் துதிப்போம். புதிதாக நற்செய்தி கேட்ட செல்லம்மாள், சிவனம்மாள், சரசு, பிரியா, கருப்பாயி, சர்மிளா, நித்தியா, செல்லம்மாள், பாண்டீஸ்வரி குடும்பத்தினர், முத்துப்பேச்சி, சரண்யா, சரசு, ரேணுகா குடும்பத்தினர், காசிமாயன் குடும்பத்தினர், செல்லப்பாண்டி குடும்பத்தினர், பால்சாமி குடும்பத்தினர், கலைச்செல்வி குடும்பத்தினர், ஆரியமாலா கணவர், லட்சுமி குடும்பத்தினர், பேச்சி, சிவனம்மாள், மல்லிகா குடும்பத்தினர், மாயக்காள், ஸ்ரீமதி, நித்தியா, மல்லிகா, சிவனம்மாள், பெரிய கருப்பன், நிவேதா, பரமனாண்டி, மனைவி லட்சுமி, சிறுவர் ஊழியம் மூலமாக சபையில் இருக்கிற 75 சிறுவர்கள், பரமேஸ்வரி, ராஜேஷ், ஹரிஷ், சாந்தி, பழனியம்மாள் ஆகியோர் இரட்சிக்கப்பட, தகப்பனாரை இழந்து வாடும் ரேணுகாவின் குடும்பத்திற்கு தேவன் ஆறுதல் அளிக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு. பிரவீன்குமார்**
**திருமதி. மீனா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சமத்துவபுரம், காமாட்சிபுரம், அரசப்பட்டி, வெயிலுகந்தபுரம், தூம்பக்குளம், வலையங்குளம், வீரப்பெருமாள்புரம், திருமால் ஆகிய பகுதிகளுக்காக, நற்செய்தி கேட்ட ராஜா, வைத்தீஸ்வரன், அப்பாவு, மணிவண்ணன், ராஜாமணி ஆகியோருக்காக, பின்தொடர்பணி பட்டியலில் உள்ள பெரியகருப்பு, மதன், கண்ணன் ஆகியோருக்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட, ஜேம்சின் பொருளாதாரத் தேவைகள் சந்திக்கப்பட, மதன் விசுவாசத்தில் உறுதியாக நிற்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு. M. கார்த்தி**
**திருமதி. ரீஜா**

நற்செய்திப் பணி செய்யப்பட்ட சென்னம்பட்டி, பூசலாபுரம், புதுப்பட்டி, ஜம்புலாபுரம் ஆகிய கிராமங்களுக்காக, பெரியசாமி விபத்தில் இருந்து பாதுகாக்கப்பட்டதற்காக, ஜெகன், லட்சுமி ஆகியோர் புதிதாக சபைக்கு வந்ததற்காகத் துதிப்போம். ஜெகன் குடும்பத்திற்கு சமாதானம் கிடைக்க, இம்மானுவேல், எரேமியா, தானியேல் ஆகியோர் தடையின்றி திருமுழுக்கு எடுக்க, விஜயா, நித்தியா, லட்சுமி ஆகியோர் தொடர்ந்து சபைக்கு வர, திருச்சபையின் ஒற்றுமைக்காக ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு. A. கந்தசாமி**
**திருமதி. முருகம்மாள்**

ஆகஸ்ட்-7

நற்செய்தி அறிவிக்கப்பட்ட இந்திராநகர், வாகைகுளம் பிரிவு ஆகிய கிராமங்களுக்காக, நற்செய்தி கேட்ட பச்சைக்கிளி, ராஜன் ஆகியோருக்காக, பள்ளக்காப்பட்டி, கீழ உரப்பனூர் ஆகிய கிராமங்களில் நடைபெற்ற சிறுவர் ஊழியங்களுக்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட, விக்ரம் மூளையில் ஏற்பட்ட பாதிப்புகள் நீங்கி சுகம் பெற, டெய்சி ஆசிரியர் தேர்வில் தேர்ச்சி பெற, சிவமுத்து, நெல்சன் ஆகியோருக்கு விரைவில் திருமணம் நடைபெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு. P. சத்தியநாதன்**
**திருமதி. கிறிஸ்டி**

நற்செய்திப்பணி செய்யப்பட்ட போத்தநதி, ரெட்ரப்பட்டி, முத்துலிங்காபுரம் ஆகிய கிராமங்களுக்காக; இந்தக் கிராமங்களில் சிறுவர் ஊழியம் தடையின்றி நடைபெறுவதற்காக, பானு, சுவாதி ஆகியோருக்கு கல்லூரியில் இடம் கிடைத்ததற்காகத் துதிப்போம். செல்வராஜ்-பரமேஸ்வரி தம்பதியினருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, ஸ்ரீதேவி தேர்வில் வெற்றி பெற-வேலை கிடைக்க, விஜயலட்சுமிக்கு சுகப்பிரசவம் கிடைக்க, சங்கருக்கு வேலை கிடைக்க-தொடர்ந்து சபைக்கு வர ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :திரு. P. ராஜா**
**திருமதி. அன்னாள்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கரடிக்கல் கிராமத்திற்காக, நற்செய்தி கேட்ட கணேசன், லட்சுமி, தங்கத்தாய், ராமர், ராசாத்தி, பிரியா ஆகியோருக்காக, அமுதாவிற்கு அருகிலேயே பயிற்சி படிப்புக்கான இடம் கிடைத்ததற்காக, காமாட்சிக்கு கிடைத்த சுகத்திற்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட, சபையின் இடப் பிரச்சனைக்கு சரியான தீர்வு கிடைக்க, மீனாட்சியின் குடும்பத்தில் சமாதானம் கிடைக்க, தினகரனுக்கு நிறைவான சுகம் கிடைக்க, ஆனந்திக்கு வேலை கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு. காளிமுத்து**
**திருமதி. குமுதா**



நற்செய்தி பணி செய்யப்பட்ட பெருங்காமநல்லூர், காளப்பன்பட்டி, ஓணாப்பட்டி, சிவநாதபுரம், அழகுரெட்டிபட்டி ஆகிய கிராமங்களுக்காக, நற்செய்திக்கு ஆர்வம் காட்டும் பெருமாயி, ஆரியமாலா ஆகியோருக்காக, திருச்சபையில் திருவசனம் சொல்லும் பெல் அமைக்கப்பட்டதற்காக, வீரம்மா விசுவாசத்தில் வளர்வதற்காகத் துதிப்போம். அன்பு குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற-இரட்சிக்கப்பட, ஜெயலட்சுமிக்கு வேலை கிடைக்க, பாண்டி குடும்பத்தோடு சேர்ந்து வாழ, செல்வம் (சிறுநீரக நோய், தோல் நோய்) நிறைவான சுகம் பெற ஜெபிப்போம்.

சுயசார்புத் திருச்சபை

**அருட்பணியாளர் : திரு. ஏனோக்**
**திருமதி.பாலின் சௌந்தர்யா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட ஜோதிமாணிக்கம், கொடிக்குளம் ஆகிய கிராமங்களுக்காக, ராதாவின் தொலைந்து போன நகை திரும்ப கிடைத்ததற்காக, பிரபாகரன் குடும்பம், ஜெயராணி குடும்பம் இருசக்கர வாகன விபத்திலிருந்து பாதுகாக்கப்பட்டதற்காக, ஜீவிதாவின் திருமணம் ஆசீர்வாதமாக நடைபெற்றதற்காக, அபிமன்யு குடல் நோயிலிருந்து சுகம் பெற்றதற்காக, குமாருக்கு கிடைத்த புதிய வேலைக்காகத் துதிப்போம். கிராமங்களில் நடைபெறுகிற சிறுவர் ஊழியங்கள் தடையின்றி நடைபெற, திருமுழுக்குப் பெற ஆயத்தமாக இருக்கிற 14 நபர்கள் விசுவாசத்தில் பலப்பட-வேத வார்த்தையில் வளர, ஒச்சம்மாள் கடன் பிரச்சனையிலிருந்து விடுதலை பெற, வாலிபர்களுக்கு ஏற்ற வாழ்க்கைத் துணை கிடைக்க ஜெபிப்போம்.

சுயசார்புத் திருச்சபை

**அருட்பணியாளர் : திரு. M. அகஸ்டின்**
**திருமதி. ஜோஸ்பின்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட செல்லம்பட்டி, மணல்பட்டி, காந்தி நகர், சங்கம்பட்டி, கருமாத்தூர், சக்கரப்பட்டி, புதுக்கோட்டை

ஆகிய கிராமங்களுக்காக, மேரி இருதய நோயிலிருந்து சுகம் பெற்றதற்காக, ஜெயலட்சுமி வாகன விபத்தில் இருந்து பாதுகாக்கப்பட்டதற்காக, செல்விக்கு கிடைத்த நிறைவான சுகத்திற்காக, அங்கம்மாள் மகள் திருமணம் நன்றாக நடைபெற்றதற்காக – தேவைகள் சந்திக்கப்பட்டதற்காகத் துதிப்போம். எஸ்தர் கணவர் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற, கலைமணி கணவர் ஆலயம் வர– வீடு கட்டுவதற்கு தேவையான பணத் தேவைகள் சந்திக்கப்பட, சபை வாலிபர்களுக்கு ஏற்ற வாழ்க்கைத் துணை கிடைக்க, ரம்யா, திவ்யா, கயல்விழி, அம்மு ஆகியோருக்குக் குழந்தை பாக்கியம் கிடைக்க, பேச்சிக்கு நிறைவான சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

**ஆகஸ்ட்-9**

**அருட்பணியாளர் :**
**சகோதரி. எஸ்தர் செல்வராணி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட லிங்கப்பநாயக்கனூர், சுளிஒச்சான்பட்டி ஆகிய கிராமங்களுக்காக, நற்செய்தி கேட்ட பூக்காரி, சகா, இரத்தினம் ஆகியோருக்காகத் துதிப்போம். பின்வாங்கி போனவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**
**திரு. பிலிப் முருகன்**

குளத்துப்பட்டியில் நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட, வாலிபர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**
**அருள்திரு.M. மூவேந்திரன்**
**திருமதி. விஜயா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட அயோத்திப்பட்டி, வகுரணி, நடுப்பட்டி ஆகிய கிராமங்களுக்காக, லட்சுமி, முத்துச்சாமி, தவச்செல்வம் ஆகியோர் புதிதாக இயேசுவை ஏற்றுக் கொண்டதற்காக, லட்சுமிக்கு மரணத் தருவாயில் தேவன் சுகம் தந்ததற்காக, ஆனந்தகுமார் விபத்தில் இருந்து பாதுகாக்கப்பட்டதற்காக, காந்தியம்மாள், வளர்மதி ஆகியோருக்கு தேவன் கொடுத்த சுகத்திற்காகத் துதிப்போம். முத்து மனைவிக்கு சுகப்பிரசவம் கிடைக்க, பின்வாங்கிப் போன ஜெயலட்சுமி, முத்துப்பேச்சி, சரஸ்வதி ஆகியோர் மீண்டும் சபைக்கு வர, மோசஸ், ஜான் ஆகியோருக்கு விரைவில் திருமணம் நடைபெற, ரவி, கனகராஜ், ராமசாமி ஆகியோர் கடன் பிரச்சினையிலிருந்து விடுதலை பெற, ஐஸ்வர்யாவுக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க ஜெபிப்போம்.

**ஆகஸ்ட்-10**

**அருட்பணியாளர் : திரு. A. பால்ராஜ்**
**திருமதி. ஏஞ்சல்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கூத்தியார்குண்டு, கப்பலூர், அகதிகள் முகாம் ஆகிய கிராமங்களுக்காக, ஜூன் 23ஆம் தேதி முதல் 25ஆம் தேதி வரை நற்செய்திக் கூட்டம் நடத்தி முடிக்க கர்த்தர் கிருபை செய்ததற்காக, புதிதாக ஆலயம் வந்த பழனிக்குமார், பாண்டி, சித்ரா, சுதா, காஞ்சிவனம், பிரகாஷ், வினிதா ஆகியோருக்காக, சுமித்ரா, பன்னீர் குடும்பங்கள் ஒன்று சேர்ந்ததற்காகத் துதிப்போம். பழனிக்குமார் வலிப்பு நோயிலிருந்து சுகம் பெற–குடும்பமாக இரட்சிக்கப்பட, வினிதா–இருளப்பதாஸ் குடும்பம் இரட்சிக்கப்பட, குழந்தை பாக்கியம் கிடைக்க, அருண்குமார் கடன் பிரச்சனையிலிருந்து விடுதலை பெற– குடும்பமாக இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு. G. ஜெகன்**
**திருமதி. திவ்யா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட உச்சப்பட்டி, காந்திநகர் ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக சந்திக்கப்பட்ட கரிகாலன், அனுசியா, செல்வமணி, மணிமேகலை, தாமோதரன், அன்னமுத்து, வசந்தா, செந்தூரம், அன்பு, காளிமுத்து, தெய்வானை, செல்வலட்சுமி ஆகியோருக்காக, சித்ராவுக்கு கிடைத்த சுகத்திற்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் சத்தியத்தில் நிலைத்திருக்க– இரட்சிக்கப்பட, சித்ரா, அனுசியா ஆகியோர் குடும்பங்களில் சமாதானம் கிடைக்க, கரிகாலன் மனம் திரும்ப, மீனாவுடைய கணவர் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற, கௌசல்யா கணவர் மரணப்படுக்கையிலிருந்து சுகம் பெற

ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**

**திரு. ஜஸ்டின் சாமுவேல் – திருமதி. சுபா**

இளைஞர் கூடுகையில் கலந்து கொண்ட 40 வாலிபர்களுக்காக, பாத்திமா நகரில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள ஜெபக்குழுவிற்காகத் துதிப்போம். சிவபாண்டி இரட்சிக்கப்பட-கடன் பிரச்சனையிலிருந்து விடுதலை பெற, பார்த்தி போதைப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற-இரட்சிக்கப்பட, கெத்சியாள், செண்பகவள்ளி ஆகியோருடைய குடும்பங்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**சுயசார்புத் திருச்சபை**

**அருட்பணியாளர் : திரு. வயநாட்டுமுத்து திருமதி. கனியமுது**

**ஆகஸ்ட்-11**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சொரிக்காம்பட்டி கிராமத்திற்காக, புதிதாக சபைக்கு வரும் வினோதினி, கனிமொழி ஆகியோருக்காகத் துதிப்போம். கனகா, முத்துலட்சுமி, பாண்டிச்செல்வி ஆகியோருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, சீதாவுக்கு ஏற்ற காலத்தில் திருமணம் நடைபெற-நிரந்தர வேலை கிடைக்க, தீபிகாவுக்கு தொண்டையில் உள்ள கட்டியிலிருந்து சுகம் பெற, சபையில் உள்ள வாலிப சகோதர சகோதரிகளுக்கு ஏற்ற நேரத்தில் திருமணம் நடைபெற-நிரந்தரமான வேலை கிடைக்க, ஊழியத்திற்கு புதிதாக ஒரு வாகனம் வாங்கப்பட, செல்லத்தாயி சகோதரர், ராணியம்மாள் ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு. J. ஜெயகுமார் திருமதி. கனி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட அடைக்கம்பட்டி, வடபழஞ்சி ஆகிய கிராமங்களுக்காக, வாலிபர்கள் மகிழ்ச்சியாக ஊழியம் செய்ய வருவதற்காகத் துதிப்போம். அஸ்வின் நீட் தேர்வில் தேர்ச்சி பெற்றதற்காக-கவுன்சிலிங்கில் அரசு கல்லூரியில் இடம் கிடைக்க, முகிலனுக்கு (பொறியாளர்) வேலை கிடைக்க, முகிலன், ஆகாஷ், அஸ்வின் ஆகியோர் திருமுழுக்கு எடுக்க ஜெபிப்போம்.

**தேனி மாவட்டம்**

**அருட்பணியாளர் : திரு. P. தேவதாஸ் திருமதி. பிலோமினா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பாலக்கோம்பை கிராமத்திற்காக, சபைக்கு புதிதாக வந்த ஜெயசித்ரா, புவி, மகேஷ், பவுனம்மாள், மாலா, வீரவேல், சின்னம்மாள் ஆகியோருக்காகத் துதிப்போம். வண்டியூர், ராயவேலூர், தெப்பம்பட்டி ஆகிய கிராமங்களில் ஜெபக்குழு ஆரம்பிக்கப்பட இடம் கிடைக்க, சபைக்கு புதிதாக வரும் ஜெயசித்ரா, பவுனம்மாள், வீரவேல், சின்னம்மாள் ஆகியோர் விசுவாசத்தில் வளர, மருத்துவமனையில் இருக்கும் வாசுகி அம்மா நலம் பெற்று வீடு திரும்ப, அழகாபுரியில் உள்ள சபைக்கு ஓய்வறை கட்டப்பட, சபையின் தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.

**ஆகஸ்ட்-12**

**அருட்பணியாளர் : திரு.G. நாதன் திருமதி. மேகலா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பொன்னம்மாள்பட்டி, அடைக்கன்பட்டி ஆகிய கிராமங்களுக்காக, சத்யாவிற்கு மருத்துவமனையில் வேலை கிடைத்ததற்காக, மீனாவிற்கு குழந்தை பாக்கியம் கிடைத்ததற்காகத் துதிப்போம் சண்முகநாதன் இருதய நோயிலிருந்து சுகம் பெற, யோக நந்தன் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற, செல்லப்பாண்டி வீடு கட்டுவதற்கானத் தேவைகள் சந்திக்கப்பட, மனுவேல் கண் நோயிலிருந்து சுகம் பெற, முத்துக்கண்ணனுக்கு விரைவில் திருமணம் நடைபெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**

**திரு.J.உலகநாதன்–திருமதி. சுபா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட மேல்மங்கலம், வடுகபட்டி ஆகிய கிராமங்களுக்காக, இளவேனில் குடும்பத்தில் சமாதானம் கிடைத்ததற்காக, விஜயலட்சுமிக்கு பள்ளியில் வேலை கிடைத்ததற்காக, மணிமேகலை கணவர் மனம்

திரும்பியதற்காக, சுஜாதா கணவருக்கு சுகம் கிடைத்ததற்காகத் துதிப்போம். ஆரோக்கியமேரி (வயிறு- சிறுநீரகம்-கால் வீக்கம்-இருதய நோய்), ஜெயலட்சுமி (கால் வலி), ஜெயராமன் (குடல் நோய்), மணிமேகலை, சுஜாதாவின் பேரன் (சிறுநீரக வீக்கம்) ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க, கிரி, விஜயா, வாசுகி குடும்பம் இரட்சிக்கப்பட-குடும்பத்தில் சமாதானம் கிடைக்க ஜெபிப்போம்.

### விருதுநகர் மாவட்டம்

**அருட்பணியாளர் :**
**அருள்திரு.B. சாமுவேல் கணேசன்**
**திருமதி. விஜயா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட தண்டியனேந்தல், தோணுகால் ஆகிய கிராமங்களுக்காக, குருசாமிக்கு கிடைத்த சுகத்திற்காக, சந்தியாகு விபத்திலிருந்து பாதுகாக்கப்பட்டதற்காகத் துதிப்போம். செல்லப்பன் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற, தோணுகால் காலனியிலிருக்கும் 35 குடும்பங்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**ஆகஸ்ட்-13**

### தென்காசி மாவட்டம்

**அருட்பணியாளர் : திரு. J. பவுல்ராஜ்**
**திருமதி. எமீமாள்.**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட மருதங்கிணறு கிராமத்திற்காக, சத்யா (5 வருடங்கள்), கனகா (எட்டு வருடங்கள் ஆகியோருக்குக் கிடைத்த குழந்தை பாக்கியத்திற்காக, பால்ராஜ் நற்செய்தியை ஏற்றுக் கொண்டு ஆலயத்திற்கு வந்ததற்காக, சண்முகத்தாய்க்கு இரண்டு மாதமாக கையில் இருந்த ஆறாத புண் ஜெபத்தின் மூலம் ஆறியதற்காகத் துதிப்போம். இளையராஜா, முத்துலட்சுமி, சுப்புலட்சுமி ஆகியோருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க-இரட்சிக்கப்பட, முத்துப்பேச்சி, பழனிச்சாமி ஆகியோர் இரட்சிக்கப்பட, சரவணன் மீண்டும் ஆராதனையில் கலந்து கொள்ள, ரூபலா தொண்டை சதை நோயிலிருந்து சுகம் பெற ஜெபிப்போம்.

### விழுப்புரம் மாவட்டம்

**அருட்பணியாளர் : திரு.D. தங்கராஜ்**
**திருமதி. எஸ்தர் பிரியா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட மடப்பட்டு, கருதப்பட்டு ஆகிய கிராமங்களுக்காக, தாட்சண்யாவிற்கு சுகப்பிரசவத்தில் பெண் குழந்தை கிடைத்ததற்காக, இளையராஜா, அபினேஷ், மகேஷ் ஆகியோர் நிறைவான சுகம் பெற்றதற்காக, டைசனுக்கு திருமணம் நிச்சயிக்கப்பட்டதற்காகத் துதிப்போம். பிரவீன்-சந்தியா, பார்த்திபன் மனைவி ஆகியோருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, பிரபா-மகேந்திரன் குடும்பமாக சேர்ந்து வாழ, பாலகிருஷ்ணன், சந்திரசேகர் ஆகியோர் இரட்சிக்கப்பட-குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற, முனீஸ்வரனிடம் கடன் வாங்கியவர்கள் திரும்பக் கொடுக்க, கிரேசுக்கு ஏற்ற வாழ்க்கைத் துணை கிடைக்க, எஸ்தர் தவமணி எலும்பு நோயிலிருந்து சுகம் பெற ஜெபிப்போம்.

### தரிசனம் பரப்புவோர்

திரு.காளிமுத்துவுக்கு திருமணம் நடைபெற்றதற்காகத் துதிப்போம். இயக்கத்தின் பொருளாதாரத் தேவைகள் சந்திக்கப்பட, புதிய தரிசனம் பரப்புவோர் கிடைக்க, புதிய ஜெபக்குழுக்கள் ஆரம்பிக்கப்பட, திரு.T. விஜயசங்கர் (தரிசனம் பரப்புவோர் உதவி இயக்குநர்), அருள்திரு. பீட்டர் (ஜெப ஒருங்கிணைப்பாளர்), ஊழியர்கள்: திரு.R.பாலசுப்பிரமணியன், திருமதி. ஹெர்சி லீதியாள் மாசில்லாமணி, திருமதி.C. மேபல்ராணி, திருமதி. இந்திராணி கில்பர்ட், திருமதி. தீபா மோசஸ், திருமதி.J. பிளஸ்ஸி, திரு. வினு, திருமதி. ராணி வின்சென்ட், திரு.K. பால்ராஜ், திரு.S. சம்பத்குமார், திரு. தாங்லம் ஜோ, திரு. காளிமுத்து, திரு.A. தம்புராஜ், திரு.P. மரியானந்தன் மாற்கு, திருமதி. சுப்புலட்சுமி, திருமதி.T. சுசீலா, திரு.M.M. சாலமோன், திரு.F. ஹென்றி ஜார்ஜ், திருமதி.A. சம்மனசு மேரி, திரு.A. ஜோசப் ஆசீர்வாதம், திரு.A. மகுடீஸ்வரன், திரு.J.P. ரவிக்குமார், திருமதி. பியூலா திருவாசகி, திருமதி. ஜான்சி டயானா, திரு.S.

கிருஷ்ணமூர்த்தி, திருமதி.V. சுவேகா, திரு.ஞானசேகரன், திரு. ஜெயராமன், திரு. கிறிஸ்டோபால் கணேஷ் ஆகியோரின் பயணப் பாதுகாவலுக்காக, குடும்பங்களுக்காக ஜெபிப்போம்.

### பணித்தளங்களின் பொறுப்பாளர்கள்

அருள்திரு.V. இம்மானுவேல் பாண்டி (தென்னிந்திய பணித்தள உதவி இயக்குநர்), திரு.C. ராஜரத்தினம் (சொத்து பராமரிப்பாளர்), திரு. தாங் பாவ் ஹோகிப் (வட இந்தியப் பணித்தள ஒருங்கிணைப்பாளர்) ஆகியோருக்காக ஜெபிப்போம்.

**ஆகஸ்ட்-14**

### மொழிபெயர்ப்புப் பணி

மொழி பெயர்ப்பாளர் திருமதி. ஷீலா நாகராஜனுக்குத் தேவையான ஞானம் கிடைக்க, மொழி பெயர்ப்பு உதவியாளர்கள் திரு.சுக்மன் மாத்லாம், திரு.கசியா மாத்லாம், செல்வி.மங்கள்தாய் ஆகியோருக்காக, நடைபெற்றுவரும் பழைய ஏற்பாட்டு மொழி பெயர்ப்பு விரைவில் முடிவடைய, யாத்திராகமம் மற்றும் சங்கீதம் ஆகிய மொழி பெயர்ப்பின் ஆய்வுப்பணிகள் நல்லமுறையில் நடைபெற, கோண்டி மொழி ஆடியோ வேதாகமம், தேவையான கோண்டி மக்களுக்கு விரைவில் கிடைக்க ஜெபிப்போம்.

### தலைமை அலுவலகம்

நிதியாண்டு தணிக்கை நல்லமுறையில் நடைபெற்றதற்காகத் துதிப்போம். அலுவலகத் தேவைகள் சந்திக்கப்பட, இயக்கத்தை நடத்தத் தேவையான ஞானம், பெலன், வழிநடத்துதல் மற்றும் பணித்தளச் சந்திப்புக்காக, பொதுச்சேவகர் அருள்திரு.அ. லெஸ்லி நாகராஜன், துணைப் பொதுச்சேவகர் திரு.S. டேவிட் சாலமோன், அருள்திரு.G. பொன்னுராஜ், திரு.A சாம் டென்சிங், திரு.A ஆஷிஸ், திரு.Y. பிரான்சிஸ் ராஜா, திரு.V.S. தம்பிராஜ், திரு.S. ஞானசேகர், திரு.A. பிரபாகரன், திருமதி. ஜான்ஸி ஜெய கிருபா, திரு.D. சைமன், செல்வி. S.செஹானா ஜெசுனி, திருமதி. சாரா ஜான் ஆகியோருக்காக, நடைபெறவிருக்கும் பொதுக்குழுக் கூட்டங்களுக்காக ஜெபிப்போம்.

### வளரும் விண்ணரசு

ஒவ்வொரு மாதமும் இதழ் தடையின்றி வெளியிடப்படுவதற்காக– தேவைகள் சந்திக்கப்படுவதற்காகத் துதிப்போம். இதழில் கட்டுரை எழுதுபவர்களுக்காக, அவர்களுடைய குடும்பங்கள் ஆசீர்வதிக்கப்பட, இதழிலுள்ள ஒவ்வொரு பகுதியும் வாசிக்கிறவர்களுக்கு பயனுள்ளதாக இருக்க, ஆசிரியர் குழுவினரின் முயற்சிகள் ஆசீர்வதிக்கப்பட, புதுமையான முறையில் இதழ் வெளியிடப்பட ஜெபிப்போம்.

**ஆகஸ்ட்-15**

### நிறுவனர்கள்

டாக்டர்.N.J. ஞானையா மற்றும் திருமதி. ரஞ்சினி ஞானையா ஆகியோருக்காக, நிறுவனரின் எழுத்துப்பணி மற்றும் அருட்பணி ஊழியங்களுக்காகவும், திருமதி. ரஞ்சினி ஞானையா அவர்கள் பெண்கள் நடுவிலும், வேதபாட வகுப்புகள் மூலமும் செய்து வரும் அருட்பணிகளுக்காகவும் ஜெபிப்போம்.

### நிர்வாகம்

செயற்குழு உறுப்பினர்கள் திரு.J. எபிநேசர் மார்டின், Dr.S. அருண், திரு.K ஜான்சன், திரு.P. கோபால கிருஷ்ணன், Dr. தினகரன் ரிச்சர்ட், திரு. J.E. பால் ஆபிரகாம், திரு. வெஸ்லி ஜோயல் மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்காக ஜெபிப்போம்.

### இறையியல் கல்வி

இறையியல் கல்வி பயிலும் 18 பேருக்காகத் துதிப்போம். சுரேந்திரா காவ்டே, திபேஷ் சலாம், உபேஷ் சலாம், ரமேஷ் வாடே, ராம்நாத் வாடே, லலிதா கருங்கா, சுனிதா வாடே, ரஜனி சலாம், சுக்யாரின் மண்டாவி, அஷ்வந்தி கச்லாம், சவிதா நுரெட்டி, சத்தியசீலன், ரெஜினா மேரி, பிரின்ஸ் ராய்சன், ரேணுகா, ராஜ்மன், சோம்சிங், நெதன்லங் ஆகியோர் சிறப்பான முறையில் இறையியல் கல்வி கற்றுத் தேற

ஜெபிப்போம்.

**புலம்பெயர்ந்தோர் அருட்பணியாளர்:**

**கன்னியாகுமரி மாவட்டம்**

**அருட்பணியாளர்: திரு. ஓமெந்திராகுமார்**
**திருமதி. சவீத்தா குமாரி**

ஆகஸ்ட்-16

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சீயோன் நகர், பார்வதிபுரம், ஆனந்த் நகர், கோணம், கம்பிபாலம், ஆசாரிபள்ளம், தேக்கம்புத்தூர், ராமன்புத்தூர் ஆகிய பகுதிகளுக்காக, புதிதாக நற்செய்தி அறிவிக்கப்பட்ட மணிஷா, ரவி, பாவல், முகேஷ், சோனி, திஷா, ஆஸா, கோலு, தீபக், சிவா ஆகியோருக்காக, திஷாவுக்கு அறுவைச்சிகிச்சையின் மூலம் குழந்தை பிறந்ததற்காக, சகுன் பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற்றதற்காகத் துதிப்போம். அஞ்சு, தாமஸ் ஆகியோருக்கு தெளிவான கண்பார்வை கிடைக்க, ஷில்பாவிற்கு அரசு செவிலியர் வேலை கிடைக்க ஜெபிப்போம்.

**சென்னை மாவட்டம்**

**திரு. தினகரன்**
**திருமதி. லீனா குமாரி கிரேஸ்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கேபிகே நகர், கல்லுக்குட்டை, தரமணி, கந்தன்சாவடி, தாம்பரம் ஆகிய பகுதிகளுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட ராசுகுமார், ராகுல், மிண்ட்டு, இப்ராஹிம், ரேகா, சுபாஷ், சின்னதாயி, பாண்டுரங்கம்மாள் ஆகியோருக்காகத் துதிப்போம். ரேகாதேவி பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற, இப்ராஹிம், சின்னத்தாயி ஆகியோர் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**மத்திய இந்தியா – மகாராஷ்டிரா**

**அருட்பணியாளர்:**
**திரு. க்யானேஷ் லால்பகதூர் தாக்குர்**

ஜுனோனா, பத்மாபூர் ஆகிய இடங்களில் ஆராதனைகள் நடைபெறுவதற்காக, மாலைநேர வகுப்புகள் நடைபெறுவதற்காகத் துதிப்போம். மாலைநேர வகுப்புகள் மூலமாக சந்திக்கப்படும் மாணவர்கள் இரட்சிக்கப்பட, நல்லமுறையில் கல்வி கற்க, லாகமில் ஆலயம் கட்ட இடம் வாங்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**திரு. ஃபனின்ட்ரா பார்**

நற்செய்திக்கூட்டத்தைத் தடுத்து நிறுத்த மதத்தீவிரவாதிகள் செய்த திட்டங்களை தேவன் தடுத்து நிறுத்தியதற்காகத் துதிப்போம். சபை தரத்திலும், எண்ணிக்கையிலும் வளர, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

## தினகரனுக்குக் கிடைத்த வெளிச்ச வாழ்க்கை

தினகரன். ஆனால், வாழ்க்கையிலோ வெளிச்சமில்லை. கிறிஸ்தவக்குடும்பத்தில் பிறந்தாலும், கிறிஸ்துவை அறியாதவராக, போதைப்பழக்கத்திற்கு அடிமையானவராக, சுயநலம் பிடித்தவராக வாழ்ந்து வந்தார். குடும்பத்தை நேசிக்காமல் தன்னை மட்டும் நேசித்ததால், குடும்பத்தில் சமாதானம் இல்லை. நல்ல வேலையுமில்லை. இயேசு கிறிஸ்துவை நேசிக்கும் இவரது மனைவி அகிலா இவருக்காக தன்னுடைய இருதயத்தை தேவனுடைய பாதத்தில் ஊற்றினார். தேவன் இவரின் ஜெபத்தை கேட்டார். குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற்றார். நல்ல வேலை கிடைத்தது. தொடர்ந்து ஆலய ஆராதனையில் கலந்து கொண்டார். இப்போது, உண்மையான தினகரனாக குடும்பத்திலும், திருச்சபையிலும் ஒளிவீசிக் கொண்டிருக்கிறார்.

**வளரும் விண்ணரசுவுக்கு சந்தா அனுப்பி பத்திரிக்கை ஊழியம் சிறக்க உதவுங்கள்**

# ராபர்ட் டி நொபிலி
## (1577-1656)



இத்தாலி நாட்டில் பிறந்த ராபர்ட் டி நொபிலி தனது 28ஆவது வயதில் 1605ஆம் ஆண்டு தமிழகம் வந்தார். மதுரையில் பல ஆண்டுகளும், இறுதியாக திருச்சியில் சில ஆண்டுகளும், ஆண்டவர் பணியைச் செய்தார். அவர் மதுரைக்கு வந்தபோது, மதுரையில் ஒரு சிறிய திருச்சபை லத்தீன் மொழியில் ஆராதனை நடத்தப்பட்டு வந்தது. அதை நடத்திய குருவானவருக்கு தமிழ்ப் பண்பாடு, மொழி பற்றித் தெரியாது. அது பற்றிய அக்கறையும் இல்லை.

ஆனால், ராபர்ட் நொபிலி நற்செய்தி பரவ வேண்டுமானால் மொழி, பண்பாட்டின் அடிப்படையில்தான் திருச்சபை நடத்தப்பட வேண்டும் என்று உணர்ந்தார். சூழ்நிலைக்கேற்ற வகையில் நற்செய்தி அறிவித்தல் (Contextualisation of the Gospel) என்னும் இன்றைய அருட்பணியியல் கொள்கையை, 17ஆம் நூற்றாண்டிலேயே நிறைவேற்ற முயற்சி செய்தார்.

அந்த நாளில் குருவானவர்கள் அணிந்த கருப்பு நிற அங்கியைத் துறந்தார். தமிழாசிரியர்கள் அணியும் வெள்ளை உடையை அணிந்தார். விரைவில் ஒரு தமிழாசிரியரிடம் தமிழும், தமிழ்ப் பண்பாடும் கற்றுக்கொண்டார்.

இவருக்கு முன்னால் இருந்த குரு போர்ச்சுக்கல் நாட்டினர். அவர் தன்னைப் "பரங்கி" என்றழைப்பதில் பெருமைப்பட்டார். ஆனால், தமிழ் மக்களோ பரங்கி என்ற சொல்லை வெறுத்தனர்–இழிவாகக் கருதினர். ஆகவே ராபர்ட் நொபிலி "நான் பரங்கி அல்ல" என்றும் தான் இத்தாலி நாட்டினர் என்றும் தன்னை அறிமுகம் செய்தார். மக்கள் மகிழ்ந்தனர்.

அந்த நாட்களில் மிக உயர்ந்த கல்வி கற்றவர்கள் சமஸ்கிருத மொழியில் புலமை வாய்ந்திருந்தனர். ஆகவே, அவர் சமஸ்கிருத மொழியையும் கற்றுக்கொண்டார். அதனால், அவருக்குக் கல்வி கற்றவர் களிடையேயும் நற்செய்தி அறிவிக்க வாய்ப்புக் கிடைத்தது. இவரை மக்கள் "தத்துவ போதகர் என்றும் தத்துவ போதக சுவாமி" என்றும் அழைத்தனர். தெலுங்கு மொழியிலும் தேர்ந்த அறிவு பெற்றார்.

உணவு முறைகள் சமுதாய உயர்வு தாழ்வுகளில் இடம் பெறுவதை

அறிந்த ராபர்ட் நொபிலி மாமிச உணவை நிறுத்திவிட்டு, காய்கறி உணவை மட்டுமே சாப்பிட ஆரம்பித்தார். அது கறி சாப்பிடாத "சைவ" மக்களிடம் இவருக்குத் திறந்த வாசலைத் தந்தது.

இந்து மக்களிடையே இருந்த 4 வேதங்கள் (ரிக், சாம, யஜுர், அதர்வணம்) முடிவடையவில்லை என்று கூறி தான் 5ஆவது வேதத்தைக் கொண்டு வந்ததாகக் கூறினார். அந்த 5ஆவது வேதத்தின் பெயர் "சத்தியவேதம்" என்றும், "நானே சத்தியம்" என்று சொன்ன இயேசுவை அது அறிவிக்கின்றது என்றும் எடுத்துரைத்தார்.

தமிழில் 40 நூல்கள் எழுதினார். இவரைத் தமிழ் உரைநடையின் தந்தை என்றும் கூறுவர். "ஞானோபதேசம்" என்னும் நூல் சிறந்த ஒன்று. சமஸ்கிருதத்தில் 8 நூல்களும், தெலுங்கு மொழியில் 4 நூல்களும் எழுதியுள்ளார்.

இவருடைய நற்செய்திப் பணியால் ஆயிரக்கணக்கான படிப்பாளிகள் இயேசுவை அறிந்தனர். ஆனால், இவருடைய முயற்சிகள், உடன் குருக்களுக்குப் பிடிக்கவில்லை. இவரைக்குறை கூறினர். ஆனாலும், தொடர்ந்து பணிசெய்து இறுதியில் சென்னையில் மறைந்தார். ஏறத்தாழ 50 ஆண்டுகள் தமிழ்நாட்டில் அரிய அருட்பணி ஆற்றிய ராபர்ட் நொபிலியை நாம் மறக்க முடியாது.

***

## கேளுங்கள் தரப்படும்...




அருகேரி கிராமத்தைச் சேர்ந்தவர் திருமதி. உமா மகேஸ்வரி. இடுப்புவலியால் மிகுந்த வேதனைப்பட்டார். ஆனாலும், நாட்கள் செல்லச்செல்ல வலி கூடியதே தவிர, சுகம் கிடைத்தபாடில்லை. மருந்துகள் சிலநேரம் வலியை மறக்கடிக்கும். ஆனால், சிலநாள்களிலேயே தாங்கமுடியாத அளவுக்கு இடுப்புவலி ஏற்பட்டது. வலிதாங்க முடியாத இந்த சூழ்நிலையில், இயேசு கிறிஸ்துவின் அன்புமொழிகள் அவரது நினைவுக்கு வரவே, இயேசப்பா எனக்கு இப்பவே இடுப்புவலி போகணும் என்று ஜெபித்தார். மழலை ஜெபத்தை கேட்ட தேவன், மிக அற்புதமான சுகத்தை அன்றே கட்டளையிட்டார். அல்லேலூயா.

*****

ஜம்பலவுரத்திலுள்ள திரு. பெரியசாமி, இப்போதுதான் இயேசு கிறிஸ்துவின் அன்பினால் தொடப்பட்டு, ஆராதனையில் கலந்து கொண்டு வருகிறார். இவருக்கு மூன்று பிள்ளைகள். பிள்ளைகளின் கல்விக்கட்டணம் கழுத்தை இறுக்கியது. யாரிடமும் கேட்பதற்கு மனம் வரவில்லை. பணம் கட்டமுடியாமல் திணறியவேளையில், கேளுங்கள் தரப்படும், தட்டுங்கள் திறக்கப்படும், தேடுங்கள் கண்டடைவீர்கள் என்று இயேசு கிறிஸ்து சொன்னாரே என்று மனதுக்குள் வேதவசனம் பேசவே, அன்றே ஆலயத்தில் வந்து முழங்காற்படியிட்டு, தேவசமூகத்தில் தனது இதயத்தை ஊற்றிவிட்டு சென்றார். தேவன் இவருடைய பொருளாதாரத் தேவையை சந்தித்தார். பிள்ளைகளுடைய கல்விக்கட்டணம் செலுத்தப்பட்டது. கடவுளுக்கே நன்றி.

## வட இந்தியா

**அருட்பணியாளர்கள்:**

**திரு. லால்துராம் சலாம்.**

**ஆகஸ்ட்-17**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பாலர்மேடா, கோர்காவ், முல்லே, தெலன்கா, போல்பா, கானாகாவ், மாட்டலா ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட துலுவுக்காகத் துதிப்போம். துல்லுதுக்கா விசுவாசத்தில் வளர, லட்சோந்தின் நிறைவான சுகம் பெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**

**திரு. ராம்பொரஸ் போயாம்**

**திருமதி. சங்கீதா போயாம்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கொங்கேரா, பூஜாவாகி, மலேச்சூர் ஆகிய கிராமங்களுக்காக, மனாய் கச்லாம் விபத்துக்காயங்களிலிருந்து சுகம் பெற்று வருவதற்காகத் துதிப்போம். மானேக் சலாமுக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, சுகந்திக்கு நிறைவான சுகம் கிடைக்க, பஜாய்க்கு சுகப்பிரசவம் கிடைக்க, ராஜ்மதி கொர்ரம் விசுவாசத்தில் வளர ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. சந்து சலாம்**

**திருமதி. சோன்பத்தி சலாம்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட போர்காவ், குருஸ்நார், படே ஜம்ரி ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட சிவ்லால், ரனதேர் ஆகியோருக்காக, கடுவா, காவ்யா, ஜெய்னி ஆகியோர் சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். மெகேத்திரின், ராமேஷ்வர், இமேலின் ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க, ராம்நாத் விசுவாசத்தில் வளர, அமிக்கா நல்லமுறையில் படிக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. மங்கலு மாத்லாம்**

**திருமதி. சுசீலா மாத்லாம்**

**ஆகஸ்ட்-18**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பாட்பால், ஷியாநார், பூசுவால் ஆகிய கிராமங்களுக்காக, சதேன், சனோ ஆகியோர் விஷப்பூச்சிகளிடமிருந்து பாதுகாக்கப்பட்டதற்காக, சுதாய் சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். சோனா, சுக்தாய், சன்வரி, தனோக் ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க, உஜாரோ பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற, சந்தேர் இரட்சிக்கப்பட, பில்லு இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. கஸியா துக்கா**

**திருமதி. ரூப்பாய் துக்கா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட ஜாக்ரி, அமாஸாரா, கோகுடா, மிஸ்ரி, போங்காபால், ஆத்வால், காசாயி, பரஸ்காவ்சன்பத்திசலாம், தஸ்ரத் சலாம், சாந்தினி துருசலாம் ஆகியோருக்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. சாது துக்கா**

**திருமதி. ரசாய் துக்கா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட ஆம்காவ், சிப்ரேல், மஸ்பூர், தெர்தூல், தாடோநார், தாடோபால் ஆகிய கிராமங்களுக்காக, சோம்தாய்கு சுகப்பிரசவம் கிடைத்ததற்காக, மனிராம் ஆராதனையில் கலந்து கொள்வதற்காகத் துதிப்போம். சோம்பத்திக்கு சுகப்பிரசவம் கிடைக்க, ராம்பத்தி, மான்கு ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. புத்சிங் வட்டே**

**திருமதி. ரெய்னி வட்டே**

**ஆகஸ்ட்-19**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட ஓங்நார், மட்டாவண்ட், மாத்லா, ஏதேம்பால் ஆகிய கிராமங்களுக்காக, ஷியாபத்தி, சீதாராம் ஆகியோரின் திருமணம் நல்லமுறையில் நடைபெற்றதற்காக, கணேஷ் பொட்டாயின் குடும்பத்தில் சமாதானம் கிடைத்ததற்காகத் துதிப்போம். ரெய்னு, கோனி, சுகோந்தி ஆகியோருக்கு சுகம் கிடைக்க, மட்டாவாண்ட் ஆலயக்கட்டுமானப்பணி விரைவில் முடிவடைய–தேவைகள் சந்திக்கப்பட, சௌமியா நல்லமுறையில் படிக்க, பிறந்த குழந்தை இறந்ததால் துக்கத்தோடுள்ள ரூப்ஜி ரானோவிற்கு தேவன் ஆறுதல் தர ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. ஜ ூகுல் சலாம்**
**திருமதி. சொனாரி சலாம்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சாந்தாகாவ், சோனாபால், பாக்பேடா, கிதும்பேடா, சிர்பூர் ஆகிய கிராமங்களுக்காக, சந்தேர் பொட்டாய்கு கிடைத்த சுகத்திற்காகத் துதிப்போம். ஜவ்னா, புத்னி சலாம் ஆகியோர் விசுவாசத்தில் வளர ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. தஸ்ரு பொட்டாய்**
**திருமதி. ஜெய்மதி பொட்டாய்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பாவ்டி, கோட்லி ஆகிய கிராமங்களுக்காக, சமிகுட்டி, லட்சுமி சலாம், சன்வாரி சலாம் ஆகியோருக்கு கிடைத்த சுகத்திற்காகத் துதிப்போம். ரஸோ குமிட்டி, மான்கு குமிட்டி ஆகியோர் இரட்சிக்கப்பட, ஜெய்மதி, சமி குமிட்டி ஆகியோருக்கு சுகம் கிடைக்க, ரனாய் சலாமுக்கு சுகப்பிரசவம் கிடைக்க ஜெபிப்போம்.

**ஆகஸ்ட்-20**

**அருட்பணியாளர்: செல்வி. கசினி துக்கா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட மொடேங்கா, பல்னா, சிங்னார், பலோடா பூட்டான் சாதுகாவ், உடித்காவ் ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட சுகோந்தி, சுனித்தா ஆகியோருக்காக, ராம்தாய்க்கு சுகப்பிரசவம் கிடைத்ததற்காக, சுனித்தா, கோர்சு ஆகியோர் ஆராதனையில் கலந்து கொள்வதற்காகத் துதிப்போம். சுனிதா, சுக்மன், புத்து, மகரூ, சீதாராம், நாகஷா, சேது ஆகியோர் விசுவாசத்தில் வளர, கோர்சுவிற்கு சுகம் கிடைக்க, கணவனை இழந்த புத்னிக்கு தேவன் ஆறுதல் தர ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு.தேசிராம் வட்டே**
**திருமதி. ரானோ வட்டே**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட காராவாண்ட், மூஞ்மெட்டா, சிவ்னி, திம்நார் ஆகிய கிராமங்களுக்காகத் துதிப்போம். மங்கள்தாய்க்கு ஏற்ற வாழ்க்கைத் துணை கிடைக்க, ராம்தாய் வட்டேவிற்கு நிறைவான சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. ஜக்நாத்குமிட்டி**
**திருமதி. சுக்கோ குமிட்டி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பிடுகாபேடா, பரண்டா, கேராபட், ஜோட்டே, ஜெய்பூரி ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட பசூ குட்டி, லட்சன் நுரெட்டி ஆகியோருக்காக, அர்ஜுக் ருரெட்டி, ஊழியர் ஆகியோருக்கு மூல நோயிலிருந்து கிடைத்த சுகத்திற்காகத் துதிப்போம். சன்பத்திக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, நிர்கு, ராஜ்மன் ஆகியோருக்கு சுகம் கிடைக்க, குர்மித் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு.லட்சு கருங்கா**
**திருமதி. புல்தாய் கருங்கா**

**ஆகஸ்ட்-21**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட போர்பால், கட்காகாவ், கொர்ரா, இருக்கோ, கட்காகாவ், சீண்டுபாரா, ஈத்கஜா ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட சுகாய், சுக்மதி, கரீஷ்மா ஆகியோருக்காகத் துதிப்போம். ரஸாய்க்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, பிரதிக்ஜா, மகோந்தி, பிரேம், கரீஷ்மா ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. சன்னு துக்கா**
**திருமதி. மனிஷா துக்கா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட மார்க்கபேடா, மூங்மேடா, காப்சி ஆகிய கிராமங்களுக்காக, ரான்தாய்கு குழந்தை பாக்கியம் கிடைத்ததற்காக, ஊழியருக்கு கிடைத்த சுகத்திற்காகத் துதிப்போம். ரன்சீலா பக்கவாத நோயிலிருந்து சுகம் பெற, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**திரு. சுக்மன் பொட்டாய்**
**திருமதி. சுக்மி பொட்டாய்**
**செல்வி. ராம்தாய் குமிட்டி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட மட்டாவாண்ட், நாராயண்பூர் ஆகிய கிராமங்களுக்காக, நியாயாதிபதிகள் 17:1–18:31 வரையுள்ள வேதபகுதிகளை கோண்டி மொழியில் மொழி பெயர்த்ததற்காகத் துதிப்போம். சுக்மி துக்கா, கெசியா துக்கா, பிரகாஷ் குமிட்டி ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க, சூசன்னா, சாமுவேல் ஆகியோர் நல்லமுறையில் படிக்க ஜெபிப்போம்.

**ஆகஸ்ட்-22**

**அருட்பணியாளர்:**
**செல்வி. கோத்தாய் பொட்டாய்**

**செல்வி. பஜாரி கருங்கா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட வேத்மாகோட், மண்டோகி, மொரஸ்கோடா, பரஸ்காவ் ஆகிய கிராமங்களுக்காகத் துதிப்போம். காம்தேவ் சுகுல் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற, ரவி நல்லமுறையில் படிக்க, சுமித்ராவிற்கு வேலை கிடைக்க, முங்காய் மூட்டுவலியிலிருந்து சுகம் பெற, ராய்மதி குடும்பத்தில் சமாதானம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. பஜ்நாத் சலாம்**
**திருமதி. சொனாரி சலாம்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட குட்ரபாரா, ரேமாவாண்ட், பாத்ரூடண்ட் பாரா, பாத்ரூடண்ட் பாரா, சாந்தி நகர் ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட மனோஜ், இத்வாரி, சோனாரு ஆகியோருக்காகத் துதிப்போம். ரஞ்சன் துக்கா, புவனேஷ்வரி ஆகியோர் பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற, ராஸோ, பத்ரூ, சுக்தாய் ஆகியோருக்கு சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

**ஆகஸ்ட்-23**

**அருட்பணியாளர்:**
**திருமதி. தன்பத்தி பொட்டாய்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கோகுடா, ரேமாவண்ட், நயானார் ஆகிய கிராமங்களுக்காக, ரஜ்னிக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டதற்காகத் துதிப்போம். டேலா, ரஜ்னி, சுந்தேர் ஆகியோர் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. சொகாய் கருங்கா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட தேவ்காவ், கொகுடா, கோடுகாவ், பிரள்பட் ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட ஜானகி, ரெய்னு, ரமேஷ் ஆகியோருக்காக, ராம்பத்தி மூல நோயிலிருந்து சுகம் பெற்றதற்காக, சுக்மதிக்கு சுகப்பிரசவம் கிடைத்ததற்காக, உமேஷ், ஜான்கி ஆகியோருக்கு கிடைத்த சுகத்திற்காகத் துதிப்போம். அஞ்சு, ஜுகுல், புங்காய், அமன் ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க, அஸ்பதி, கங்காய், சீதாராம், ரனோத்தி, பிரசாத் ஆகியோர் விசுவாசத்தில் வளர, ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**திரு. லால்சாய் பொட்டாய்**
**திருமதி. சீத்தா பொட்டாய்**

நற்செய்தி அறிக்கப்பட்ட கோங்லா, ஸாரா, முஸ்குடும், முண்டுபால் ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட ராம்லால், சுபாஷ், மெகந்தர், ரேணு, ரனாய், சமீர், ரெய்சிங் ஆகியோருக்காக, சுந்தர் கெசியா, அணில் கெசியா ஆகியோர் வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டதற்காக, லக்மு, சமர்சிங் ஆகியோர் சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். கச்சிரி, சுக்தேவ் காவ்டே , சம்ரா ஆகியோருக்கு சுகம் கிடைக்க, சுஷிலாவிற்கு (15 வருடம்) குழந்தை பாக்கியம் கிடைக்க, சுகாய், சுக்ரி ஆகியோருக்கு ஏற்ற வாழ்க்கைத் துணை கிடைக்க, ஜெய்கே பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. மான்சிங் கச்லாம்**

**ஆகஸ்ட்-24**

**திருமதி. சுல்மதி கச்லாம்**

நற்செய்தி அறிக்கப்பட்ட கோங்லா, ஸாரா, முஸ்குடும், முண்டுபால் ஆகிய கிராமங்களுக்காக, கோந்தாகூரில் ஆராதனை ஆரம்பிக்கப்பட்டதற்காக, கஸியா சலாமிற்கு சுகம் கிடைத்ததற்காகத் துதிப்போம். சுக்தாய் பொட்டாய் பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற, ஸாரா பணித்தள வாலிபர்கள் விசுவாசத்தில் வளர, கோங்லா பணித்தளத்தில் உள்ளவர்களுக்கு அடிப்படை வசதிகள் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. சந்துராம் வட்டே**
**திருமதி. சுகோந்தின்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கங்கால், கர்மாரி, தாடோநார் ஆகிய பகுதிகளுக்காக, ஷியாபத்தி விஷப்பாம்பு கடியிலிருந்து சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். புத்ராம் கோடா (மனநோய்), ஊழியரின் மகன் ஆகியோருக்கு சுகம் கிடைக்க, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**ஜார்கண்ட் மாநிலம்**

**அருட்பணியாளர்: திரு. குந்தர் பகெல்**
**திருமதி. மம்தா பகெல்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட மாங்கை, பல்ராம்பூர், டால்டோன் கன்ச், சந்தாவா, லாம்பி,

டாடாபானி ஆகிய கிராமங்களுக்காக, சனோஜ் கொர்கெட்டா குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற்றதற்காக, தீன்தயாள் சர்மா ஆராதனையில் கலந்து கொள்வதற்காகத் துதிப்போம். மகேந்திரசிங், விகாஷ்குமார், ஆனந்த் டோப்போ, மனோஜ் ஆகியோர் விசுவாசத்தில் வளர, மாஜி, கேர்வார், பூயார், குப்தா, உரன் ஆகிய இன மக்கள் இரட்சிக்கப்பட, ஆலயக்கட்டுமானத் தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. மங்கள் மராண்டி**
**திருமதி. சுகாஜினி சௌரேன்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட லப்தா காடி, ஜர்ஜுடி, காட்பாந்தா, கில்ஹா, பாதேலா, சோட்டாபோக்ரிய்யா, ஜாகேஷ்வர் ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்திக் கேட்ட ஷியால் முர்மு, ஆபிஸ்வர் மராண்டி, மனோஜ் மராண்டி, மனோஜ் முர்மு ஆகியோருக்காக, மாகலு ஹஸ்தா, நஸோன் முர்மு ஆகியோருக்கு கிடைத்த சுகத்திற்காகத் துதிப்போம். ஷியால் ஜீடி, டாங்பாரா, ஜோர்டிகா, பாத்ரியா ஆகிய கிராமங்களில் நற்செய்தி அறிவிக்க திறந்த வாசல் கிடைக்க, திலீப் மராண்டி, ஜோயல் ஹஸ்தா ஆகியோர் இரட்சிக்கப்பட, தன்முனி கேம்ப்ரேக்கு நிறைவான சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

## உத்தரப்பிரதேசம்

(அவாதி, மிஸ்ரா, ராஜ்புத், கௌதம், தாக்கூர், சௌகான், சௌத்ரி-ஆகிய மக்கள் கூட்டத்தினர்)

**அருட்பணியாளர்: திரு. ராம்ஜியவான்**
**திருமதி. ராஜ்லட்சுமி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பிஸ்வா, இஸ்பாபூர், மதன்பூர், மெய்பத்பூர், சரெய்யா, மூரத்பூர், ஜம்பா, பூடான்பூர், பிஜென்டா, படாய்பூர், கங்காபூர், மடியாவா, ஜான்பூர், கினோத்தி ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட முகேஷ், கிரண், சுக்கல், சுனில், பியுஷ், சௌரத், கான்சி, பூல்குமாரி, சன்னி, பாரத், ரஞ்சித், சாலு, ரேக்கா, கோல்டி, சுதீஷ், அபி, ஆன்ஸ், ஸ்ரீராம்சிங், அகிலேஷ், அனுப், வைபௌவ், ரமேஷ், மோகினி, சுமன், ஆர்த்தி, நிதீஷ், நிதின், சாந்தினி, ராம்பகதூர், முன்னிதேவி, திப்பு ஆகியோருக்காக, ரோஹித், ஜானரி, கோபர்கன், கௌசல்யா, கம்லா ஆகியோருக்குக் கிடைத்த சுகத்திற்காகத் துதிப்போம். காம்னி, நீரஜ்குமாரி ஆகியோருக்குக் குழந்தை பாக்கியம் கிடைக்க, குஷ்பூவிற்கு சுகப்பிரசவம் கிடைக்க, ரேணு (இருதய நோய்), அர்ப்பிந்த் (இரத்த அழுத்த நோய்), காம் கிஷோர் (கண்பார்வைக் கோளாறு), மோகித் (தைராய்டு) ஆகியோர் நிறைவான சுகம் பெற, சசிபிரபா இரட்சிக்கப்பட, பூல்கல்லி பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. மிதிலேஷ்குமார்**
**திருமதி. சுனித்தா தேவி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பக்கரியாஹர், மூடா, சுத்தரி, குச்சல்ஹா, ஹரெய்யா, லங்கடிபூர், ஹசரியா, கோலா, காவேல்பூர், மாட்டாபூர்வா, மஜ்ரா, சிரெய்ஜா, சுர்ஜி பூர்வா, கூஷ்மௌரி, திங்கூர் பூர்வா, மாணிக்பூர் ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட புஷ்பா தேவி, நரேந்திரா, காஜல், நிக்கில், சால்ரா, பிரியங்கா, அவ்தேஷ், லட்சுமி, தேவாந்தி, ஜோதி, மன்வீர், ஆர்யன், ரமேஷ், லஜாவதி, பூனம், பூரன், மோகித், ஷாலினி, மோகினி, சுனிலா ஆகியோருக்காக, அங்கூல்–பூஜா திருமணம் நல்லமுறையில் நடைபெற்றதற்காக, ஷிமாதேவி, ரஞ்சித்குமார், குசும்தேவி ஆகியோருக்கு கிடைத்த சுகத்திற்காக, ரமேஷ்குமார் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற்றதற்காகத் துதிப்போம். மம்தாதேவிக்கு ஏற்ற வாழ்க்கைத் துணை கிடைக்க, தினேஷ்குமார் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற, ரமேஷ் குடும்பம் இரட்சிக்கப்பட, மாலதி நெஞ்சு வலியிலிருந்து சுகம் பெற ஜெபிப்போம்.

## ஆந்திரா மாநிலம் (தென்னிந்தியா)

**அருட்பணியாளர்:**
**திரு. வெங்கடேஸ்வரலு**
**திருமதி. கடம் புஷ்பம் குமாரி**

ஆகஸ்ட்-25

நற்செய்தி அறிவிக்கப்பட்ட டொட்லவாரமிட்டா, நாயுடுபேட்டா, கானூரு ஆகிய கிராமங்களுக்காக, கனூரில் வீடு வீடாக நற்செய்தி

அறிவிக்கப்பட்டதற்காக, சைலதா ஆராதனையில் கலந்து கொண்டதற்காக, டோட்லவாரமிட்டாவில் நற்செய்தி அறிவிக்கத் திறந்த வாசல் கிடைத்ததற்காக, நாயுடுபேட்டா ஆராதனையில் கலந்து கொண்ட சுதீர் குடும்பத்தினருக்காகத் துதிப்போம். நாயுடுபேட்டாவில் ஆலயம் கட்டுவதற்கு இடம் மற்றும் கட்டுமானத் தேவைகள் சந்திக்கப்பட, ஜெஸ்ஸி, செங்கம்மா ஆகியோருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, பெல்சியா, ஸ்ரவானி ஆகியோருக்கு சுகப்பிரசவம் கிடைக்க, புலம்பெயர்ந்த வட இந்திய இந்தி பேசும் மக்களைச் சந்திக்க எடுக்கப்படும் முயற்சிகளுக்காக, புஷ்பாவுக்கு நிறைவான சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**

**திரு. பால் வீரமணி**
**திருமதி. பெல்சியா**

நற்செய்திப் பணி செய்யப்பட்ட கானூரு, டொட்லவாரமிட்டா, மேனகூரு ஆகிய கிராமங்களுக்காக, டொட்லவாரமிட்டாவிலுள்ள ஏனாதி மக்கள் மத்தியில் மொழிபெயர்ப்பு உதவியுடன் ஆண்டவருடைய வார்த்தையை பகிர்ந்து கொண்டதற்காகத் துதிப்போம். ஊழியரின் வீட்டு உரிமையாளருக்கு நிறைவான சுகம் கிடைக்க, மொழிபெயர்ப்பு உதவியின்றி தெலுங்கு மொழியைச் சரியாகவும், தெளிவாகவும், உள்ளூர் மொழிநடையில் பேச, ஊழியரின் மனைவிக்கு சுகப்பிரசவம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. உதய்குமார்**
**திருமதி. பிரசன்னா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட வெங்கடரெட்டி காலனி, சிந்தாரெட்டிபாளையம் ஆகிய கிராமங்களுக்காக, ஸ்ரீனு இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதற்காக, சந்திரபால் கிறிஸ்துவில் வளர்ந்து வருவதற்காக, சிந்தாரெட்டிப்பள்ளத்தில் நற்செய்தி அறிவிக்கப்பட்டதற்காகத் துதிப்போம். தெரு நற்செய்தி, தனிநபர் ஊழியம் மூலம் சந்திக்கப்படுகிறவர்கள் இரட்சிக்கப்பட, ஆலயக் கழிப்பறை கட்டப்பட–தேவைகள் சந்திக்கப்பட, ஊழியரின் தந்தை இஸ்ரேல் (வயது: 89) வலது கை மற்றும் வலது கால் பக்கவாதத்திலிருந்து நிறைவான சுகம் பெற ஜெபிப்போம்.

**ஆகஸ்ட்-26**

**அருட்பணியாளர்:**

**திரு. பத்தலா மதுசுதாகர்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பெரிமிடி, துவாரகாபுரம் ஆகிய கிராமங்களுக்காக, கானூரில் நடைபெற்ற அருட்பணியாளர் கூட்டத்தில் கலந்து கொண்டு, ஆவிக்குரிய நன்மை பெற்றதற்காகத் துதிப்போம். ஆலயத்திற்கு மின் இணைப்பு கிடைக்க ஜெபிப்போம்.

**கர்நாடக மாநிலம் - தேவனஹள்ளி(தென்னிந்தியா)**

**அருட்பணியாளர்:**

**திரு. சாமுவேல் பிரபாகர்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட வெங்கடப்பூர், தர்பனஹள்ளி, ஹோட்டேஹள்ளி ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட மினேசுக்காகத் துதிப்போம். கோட்டேஹள்ளியில் நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**ஒடிசா**

**அருட்பணியாளர்: திரு. டேனியல் சாந்தா**
**திருமதி. புலிமி சாந்தா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட குமுடகுடா, ஒச்சன் குடா, காசிகுடா, பேலாபுட், மாட்டிக்கல் ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட ரம்சு, நாராயண், கெத்து, சீதாராம், தம்பு, கிருஷ்ணா ஆகியோருக்காக, ரூவி சிறுநீரக நோயிலிருந்து சுகம் பெற்றதற்காக, மிந்திக்கு சுக்பிரசவம்

கிடைத்ததற்காகத் துதிப்போம். கெத்து, கொங்குலு, தன்பத்தி சாந்தா, மொகன் சாந்தா, லட்சன், லோபோ, சந்தரு ஆகியோர் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**

**ஆகஸ்ட்-27**

**திரு. அப்பொல் மண்டல்**
**திருமதி. சுமித்ரா மண்டல்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சிலிடோங்கிரி, கோன்ஷாப் பாரா, துமர்திகி, பரசுண்டி, தொட்ரபாரா ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட சொய்த்தி, ஜெகநாத், ரம்சா, சந்தோஷி, சீதா, தன்பதி, சந்தோஷ், பிங்கி, புருனோ, ஜெய்த்மோன், ரத்தினி, அஞ்சனா, சுரேந்தர், விஜய், சுக்குமோன், பித்தோந்தி, பித்தோம் ஆகியோருக்காக, ரத்தினி இடுப்பு வலியிலிருந்து சுகம் பெற்றதற்காக, விஜய், பாத்திமா ஆகியோர் புதிதாக ஆராதனையில் கலந்து கொள்வதற்காகத் துதிப்போம். ஹரி குடும்பத்தினர் இரட்சிக்கப்படதொட்ரபாரா கிராமத்தில் நற்செய்தி அறிவிக்க உள்ள எதிர்ப்புகள் நீங்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திருமதி. ஜானகி மாஜி**
**திரு. லெலன்–திருமதி.பிரிட்டி லெலன்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சிமிலி குடா, பாப்லி, கபித்தா, நாகூல், மான்பார், குமரகுடா, பனுவா குடா ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட மைனா, அஜ்சோனா, மங்கல்தி, சுக்லி, திரிநாத் ஆகியோருக்காகத் துதிப்போம். சுமேஷ் (10 வருடம்) எழுந்து நடக்க, மீனா, பால்மதி ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**குக்கி அருட்பணியாளர்கள்**
**(வடகிழக்கு மாநிலங்கள்)**

**அருட்பணியாளர்: திரு. நபின் நர்ஜினரி**
**(அருணாச்சல பிரதேசம்)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட அலுபாரி, சிவாஜி நகர், லோஹித்பூர், பயா, மேகய்லியங், கோரலியங், டாப்ரஹான், தெல்லுலியங், பயன், 20ஆவது மைல் ஆகிய பகுதிகளுக்காக, ஊழியர் முதுகுவலியிலிருந்து சுகம் பெற்றதற்காக, தீமோத்தேயு போஜே திருமுழுக்கு பெற்றதற்காக, சங்கீதா பந்தாரி சுகம் பெற்று வருவதற்காகத் துதிப்போம். பிரேமா நோர்பு, ஊழியர் மனைவியின் சகோதரி ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

**ஆகஸ்ட்-28**

**அருட்பணியாளர்:**

**திரு. தங்காலுன் கிப்கின் (அஸ்ஸாம்)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட ருகாசன், மோலன், அமராஞ்சன், வோம்லி, ஜவ்ஜங், எக்ரானி, ஷுகஞ்சன் ஆகிய பகுதிகளுக்காக, வீட்டுக்கூட்டம், நோயுற்றவர்களை சந்தித்தல், உபவாச ஜெபம் ஆகியவை தொடர்ந்து நடைபெறுவதற்காகத் துதிப்போம். ராபின்சன் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**

**திரு. ஆபிரகாம் தௌதாங்**
**(மேற்கு வங்கம்)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட தெபித்ங்கா, பாபுபாஷா, சில்வர் டேல், சிஆர்பிஎப் குடியிருப்பு, சிவ்மந்திர் ஆகிய பகுதிகளுக்காக, வீட்டுக்கூட்டம், உபவாசக்கூட்டம் ஆகியவை நடைபெறுவதற்காகத் துதிப்போம். டேனியல், நிடாராணி குருங் ஆகியோர் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**

**திரு. ஹெம்ஹோசன் ஹோகிப்**
**(அருணாச்சல பிரதேசம்)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பெகுலியங், கெப்ருலியங், ஹடிதுபா, யய்லிங் ஆகிய பகுதிகளுக்காக, அர்ஜுன் காம்ப்ரே மீண்டும் ஆராதனையில் கலந்து கொண்டதற்காக, சர்மா சுகம் பெற்று ஆராதனையில் கலந்து கொள்வதற்காக, உபவாச ஜெபம், குடும்பக்கூட்டம் ஆகியவை நடைபெற்றதற்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**ஆகஸ்ட்-29**

**அருட்பணியாளர்:**

**திரு. இங்காம்போ ஹோகிப் (அஸ்ஸாம்)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட அம்ரஜன், கர்பி, ஆங்லாங் ஆகிய

பகுதிகளுக்காக, உபவாச ஜெபம், குடும்பக்கூட்டம் ஆகியவை நடைபெற்றதற்காக, குக்கி, கர்பி, கச்சாரி ஆகிய இனக்குழுக்கள் நடுவில் நற்செய்தி அறிவிக்கும் பணி நடைபெற்றதற்காகத் துதிப்போம். பள்ளி நிர்வாகம் நல்லமுறையில் நடைபெற, மாணவர்கள், ஆசிரியர்கள், ஊழியர்கள் ஆகியோரின் பாதுகாப்புக்காக, ஆசிரியர்கள் சிறப்பான முறையில் கற்றுக் கொடுக்க, விடுதியில் பயிலும் மாணவர்கள் நல்லமுறையில் படிக்க, ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் ஊழியர்கள் ஒருமனதோடு செயல்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**

**திரு. செய்கோதாங் ஹோகிப் (சிக்கிம்)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சோம், மேல் மாங்மோ, டென்டம் மருத்துவமனை ஆகிய பகுதிகளுக்காக, பிரியங்கா ராய் இயேசுவை ஏற்றுக் கொண்டதற்காகத் துதிப்போம். டென்டாமில் ஆலயம் கட்டப்பட– தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**

**திரு. சத்யாபாஸி மோல்சம் (திரிபுரா)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட எம்புருட் சேரா, கமலா சேரா, மேகஸின், ஹவாய்பாரி ஆகிய பகுதிகளுக்காக, உபவாச ஜெபம், குடும்பக் கூட்டம் ஆகியவை நடைபெற்றதற்காக, ஊழியர் குடும்பமாக சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**

**ஆகஸ்ட்-30**

**திரு. செய்கோலன் குய்டி (திரிபுரா)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட நெய்லஹா, டான்சாரா, எம்புருட் சேரா, பங்க்ஜங்க், கெய்கன், ஜாவ்காவ், லாங்ஜோல், முன்பி ஆகிய பகுதிகளுக்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**

**திரு. லென்ஹோகோ ஹோகிப் (திரிபுரா)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட ஜாவ்ல்காவ், ஸ்ரீலங்கா, சால்டாசெரா, எம்புருட் சேரா, டான்சாரா ஆகிய பகுதிகளுக்காக, திகார் மோல்சம் இயேசுவை ஏற்றுக் கொண்டதற்காகத் துதிப்போம். சஞ்சுரி மோல்சமின் கணவர் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**

**திரு. செய்மிங்தங் கிப்கின் (மணிப்பூர்)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கேம்ங்காய், காங்குய், கேமிங்பாய், ஹோலப், பைஜிங், மோங்தங், கங்க்போக்பி, ஹோலிஜங் ஆகிய பகுதிகளுக்காகத் துதிப்போம். மணிப்பூர் அகதிகள் முகாமிலுள்ளவர்கள் மீண்டும் தங்கள் வீடுகளுக்குத் திரும்ப ஜெபிப்போம்.

**ஆகஸ்ட்-31**

**அருட்பணியாளர்:**

**திரு. ஸ்டீபன் லுங்கோஜின் (சிக்கிம்)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட மார்டம், மேற்கு சிக்கிம் ஆகிய பகுதிகளுக்காக, கணவரை இழந்த ஹேமா சர்மா விசுவாசத்தில் நிலைத்து நிற்பதற்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**

**செல்வி. லிங்னெய்கிம் (அருணாச்சல பிரதேசம்)**

மாணவர் ஐக்கியம், வேதாகம வகுப்பு, ஆராதனை ஆகியவை நடைபெறுவதற்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**

**திரு. ஹோலன்லால் கிப்கின் (அருணாச்சல பிரதேசம்)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட நியூ மேகலியங், சிவாஜி நகர், ஜெலக் பாரி, பயஹாம், தங்லத், ஹஜுஹாம் ஆகிய பகுதிகளுக்காக, பனோலு பெல்லயர், தைலு ஆகியோர் சுகம் பெற்று வருவதற்காகத் துதிப்போம். கடிசே மான்யு, மரிசாய் தஞ்சி ஆகியோர் நிறைவான சுகம் பெற, மினாலு ட்ராய் விசுவாசத்தில் வளர, கோரா இரட்சிக்கப்பட, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

# 2025 ஜுலை மாத வேத வினாக்களுக்கு விடைகள்

## யோவான் 8-14 அதிகாரங்கள் வரை

**பொருத்துக**

1. துணிக்கை – சாத்தான் 13:27
2. வனாந்தரம் – எப்பிராயீம் 11:54
3. மாரிக்காலம் – தேவாலயப்பிரதிஷ்டை 10:22
4. சத்தியம் – விடுதலை 8:32
5. கண்கள் – சேறு 9:14

**கோடிட்ட இடங்களை நிரப்புக**

1. வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன், பிதாவினிடத்தில் 14:6
2. இயேசு, சாலொமோனுடைய, உலாவிக் 10:23
3. வார்த்தையைக், மரணத்தைக் 8:51
4. தேவபக்தியுள்ளவனாயிருந்து, சித்தமானதைச், செவி கொடுப்பார். 9:31
5. உயிர்த்தெழுதலும், ஜீவனுமாயிருக்கிறேன், மரித்தாலும். 11:25

**விடை எழுதுக**

1. நித்திய ஜீவனாய் 12:50
2. லாசருவைக் குறித்து 11:44
3. திதிமு என்னப்பட்ட தோமா 11:16
4. கள்ளனும் கொள்ளைக்காரனுமாய் 10:1
5. பரிசேயர் இயேசுவிடம் 8:13

# ICGM வங்கி கணக்கு விபரங்கள்

அருட்பணியாளர் உதவி மற்றும் பொதுவான காணிக்கைக்காக

Account Name : INDIA CHURCH GROWTH MISSION
Account Number: 10143136773
Bank : State Bank of India
Branch Name : Selaiyur, Chennai-73
IFSC Code : SBIN0007948

icgm1014@sbi

ஆலயக் கட்டிட நிதிக்காக

Account Name : INDIA CHURCH GROWTH MISSION
Account Number: 11194454531
Bank : State Bank of India
Branch Name : Vinayaganagar, Madurai.
IFSC Code : SBIN0001479

மருத்துவ நிதிக்காக

Account Name : ICGM MEDICAL EMERGENCY ENDOWMENT FUND
Account Number: 31961036921
Bank : State Bank of India
Branch Name : SELAIYUR, Chennai-73.
IFSC Code : SBIN0007948

வங்கி மூலமாக காணிக்கைகளை அனுப்புபவர்கள், அவ்விபரங்களை நமது அலுவலகத்திற்கு கடிதம் மூலமாகவோ, **SMS** மூலமாகவோ/ **Whatsapp** மூலமாகவோ 94421 50482 என்ற எண்ணுக்கு தகவல் அனுப்பும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். நன்றி.

மேலேயுள்ள **QR** கோடை பயன்படுத்தியும் உங்களுடைய காணிக்கையைச் செலுத்தலாம்.



# வெளி இனப்பெண்களின் பங்கு

Dr.N.J. ஞானையா

**மாணிக்கம்:** குட் ஈவினிங் ஜான். என்ன இன்று வேதமும் கையுமாக வர்ர!

**ஜான்:** ஒரு கட்டுரை (பேப்பர்) எழுத வேண்டியிருந்தது. அதை முடித்துவிட்டு நூல் நிலயத்திலிருந்து நேராக வர்ரேன்.

**சாலமோன்:** (வந்து கொண்டே) வணக்கம் தம்பிகளா? எப்படியிருக்கீங்க. போன வாரத்திலே "இஸ்ரவேல் மட்டுமல்ல–பல்வேறு இன மக்களும்" என்ற உரையாடல் நடந்தது. அதை மீண்டும் வேறொரு கண்ணோட்டத்தில் நான் பார்க்க விரும்புகிறேன்.

**மாணிக்கமும் ஜானும்:** (வியப்பாக) அது என்ன வேறொரு கண்ணோட்டம்?

**சாலமோன்:** நம் ஆண்டவர் இயேசுவின் வம்ச வரலாற்றில் வருகின்ற நான்கு "வெளி இனப்பெண்களின் வரலாறு!"

**ஜான்:** நானும் அதை மத்தேயு முதல் அதிகாரத்தில் வாசித்தேன். தயவு செய்து நீங்கள் விளக்கிக்கூறுங்கள்.

**சாலமோன்:** முதல் பெண்ணின் பெயர் தாமார், அவளைப்பற்றி ஆதியாகமம் 38ஆம் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது.

**மாணிக்கம்:** அவள் யூதாவின் மருமகள். அவரை ஏமாற்றி ஒரு வேசியாக (தாசியாக) நடித்து, அவருடன் உறவு கொண்டு இரட்டைப்பிள்ளைகளைப் பெற்றவள். அதில் ஒருவனுடைய பெயர் பாரேஸ். இத்தகைய தவறான நிகழ்ச்சிகளை ஏன் வேதத்தில் எழுதிவைத்திருக்கிறார்கள்?

**சாலமோன்:** அது நல்ல கேள்வி! ஆனால் அது ஆண்டவர் மற்ற இனத்தவரையும் தன் வம்ச வரலாற்றில் பயன்படுத்த அவர் வகுத்த திட்டம் என்றுதான் நான் நினைக்கிறேன். எனவே தாமார் என்னும் முதல் பெண் ஒரு கானானிய நாட்டவள். யூதா என்னும் கோத்திரத்தலைவரே அவளை "நீதியுள்ளவள்" (ஆதி 38:26) என்று கூறுகிறார். அவளுடைய இரட்டைப்பிள்ளைகளில் ஒன்றான பாரேஸ் இயேசுவின் முன்னோர்களில் ஒருவர்.



**மாணிக்கம்:** அடுத்த பெண் யார்?

**சாலமோன்:** இரண்டாவது பெண்ணின் பெயர் ராகாப். அவள் உண்மையிலேயே

ஒரு தாசி. எரிகோ நகரைச் சேர்ந்தவள். அவளுடைய வரலாறு யோசுவா 2 ஆம் அதிகாரத்திலும், ஆறாம் அதிகாரத்திலும் வருகிறது. மத்தேயுவிலே சல்மோன் என்பவர் போவாசை ராகாப் மூலம் பெற்றார் என்றும் வருகிறது. எரிகோ நகரம் ஓர் உருவ வழிபாடு செய்யும் மக்களின் நகரம். அத்தகைய பின்னணியத்தில் இருந்து வந்தவள் ராகாப்.

**ஜான்:** அதுமட்டுமல்லாமல் அவளுடைய தொழிலும் சரியில்லை. ஏன் அவள் வேதத்தில் இடம்பெறுகிறாள்?

**சாலமோன்:** எவ்வளவு இழிவான வாழ்வு வாழ்ந்தாலும், கடவுளை நினைத்து மனந்திரும்பினால் அவர் புது வாழ்வு தருபவர் என்னும் உண்மை வலியுறுத்தப்படுகின்றது. இயேசுவின் வாழ்வில், ஒரு சமாரியப்பெண்ணை மாற்றுகிறார். அவள் தரமற்ற வாழ்வு வாழ்ந்தவள். 5 கணவர்களைத் துறந்து திருமணமாகாமல் ஒருவனுடன் வாழ்ந்தவள். ஆனால் அவளும் மனந்திரும்புகிறாள். அதுபோலவே ராகாபின் மனமாற்றம் யோசுவா 2:11 இல் வருகிறது. அவள் கர்த்தரை நம்பி விசுவாசித்ததாலே அவளுடைய பெயர் விசுவாச அட்டவணையிலும் வருகிறதே ( எபிரேயர் 11:31).

**ஜான்:** அவளுடைய கணவர் சல்மோன் ஒருவேளை யோசுவா அனுப்பிய இரண்டு வேவுகாரர்களில் ஒருவராக இருந்திருப்பாரோ?

**சாலமோன்:** அந்தச் செய்தி வேதத்தில் இல்லை. ஆனால் இருந்திருக்கலாம். நாம் நன்றாக உணரவேண்டிய உண்மை ராகாப் ஒரு யூதப்பெண் அல்ல–ஆனால், ஆண்டவரின் வம்ச வரலாற்றில் வந்த வெளிஇனப்பெண். நல்ல விசுவாசி. மூன்றாவது பெண்ணின் பெயர் ரூத். அவள் மோவாபிய இனத்தைச் சேர்ந்தவள். போவாசின் மனைவியாக மாறினாள். புகழ்பெற்ற தாவீது அரசரின் முப்பாட்டி (கொள்ளுப்பாட்டி?!) அந்த ரூத்.

**ஜான்:** தன்னுடைய மாமியாரிடம் ரூத் காட்டிய அன்பும், அவரிடம் ரூத் சொன்ன ஓர் ஆணித்தரமான பதிலும் சில வாரங்களுக்கு முன்னர் ஆலயத்தில் குருவானவரின் அருளுரையில் வந்தது.

**மாணிக்கம்:** அது என்ன பதில்?

**ஜான்:** ரூத் 1: 16இல் நான் உம்மைப் பின்பற்றாமல் உம்மைவிட்டுத் திரும்பப் போவதைக் குறித்து என்னோடே பேச வேண்டாம். நீர் போகும் இடத்திற்கு நானும் வருவேன். நீர் தங்கும் இடத்தில் நானும் தங்குவேன். உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம். உம்முடைய தேவன் என்னுடைய தேவன்.



**சாலமோன்:** மிக அருமையான வசனம். அருமையான மனந்திரும்புதல். அதற்கு அடுத்த வசனத்திலும் கர்த்தர் என்ற சொல்லை அவள் பயன்படுத்துகிறாள். ஆண்டவரான இயேசு பிறந்த பெத்லகேமுக்கு வந்து சேருகிறாள். போவாசின் தாய் வெளி நாட்டுப் பெண்ணான ராகாப். ஆகவே ரூத் என்னும் வேறொரு வெளி நாட்டுப்பெண்ணை

(ஆனால் கர்த்தரை ஏற்றுக்கொண்டவளை) திருமணம் செய்ய போவாஸ் எந்தத் தயக்கமும் காட்டவில்லை.

கடைசியாக நான்காவது பெண் தாவீதின் மனைவி. முன்பு உரியாவின் மனைவியாக இருந்தவள். அவளின் பெயர் பத்சேபாள். அவள் ஏத்தியர் இனத்தைச் சேர்ந்தவள்.

**ஜான்:** மிக அருமையான நான்கு வேற்று இனப்பெண்களின் வரலாறுகள். வேறு எதாவது கூற விரும்புகிறீர்களா?

**சாலமோன்:** கண்டிப்பாக. மோசேயின் மனைவியாகிய சிப்போராளைக் கூறலாம். அவள் யூதப்பெண் அல்ல. அவள் எத்தியோப்பியா நாட்டவள் (எண்ணாகமம் 12:1). தேவையற்ற முறையில் அவளைப்பற்றி ஆரோனும், மிரியாமும் பேசி, மோசேயின் தலைமையையும் குறை கூறிச் சிக்கலில் மாட்டிக்கொள்ளுகிறார்கள்.

அடுத்து, நியாயாதிபதிகளின் புத்தகம் முதல் அதிகாரம் 16 ஆம் வசனம் இப்படிச் சொல்லுகிறது. "மோசேயின் மாமனாகிய கேனியனின் புத்திரரும், யூதாவின் புத்திரரோடே.... குடியேறினார்கள்"; சகரியாவின் புத்தகம் 8:22 இல் "அநேக ஜனங்களும் பலத்த ஜாதிகளும் எருசலேமிலே சேனைகளின் கர்த்தரைத் தேடவும், கர்த்தருடைய சமூகத்தில் விண்ணப்பம் பண்ணவும் வருவார்கள்" என்று வாசிக்கிறோம்.

கர்த்தர் யூதர்களை மட்டுமல்ல அவரைத் தேடும் யாவரையும் ஏற்றுக்கொள்ளுவார் என்பதுதான் இந்த வசனங்கள் கூறும் உண்மை.

திருச்சபை வளர்ச்சியின் தந்தை (Father of Church Growth) என்று அழைக்கப்படும் டாக்டர் டானல்ட் மெக்காவரன் அடிக்கடி கூறும் வசனம் மத்தேயு 28:19–"சகல ஜாதிகளையும் சீஷராக்கி" என்பது. அவர் அதை கிரேக்க மொழியிலும் "Panta Ta Ethne" (எல்லா இனப்பிரிவுகளையும்) என்று அழுத்தம் திருத்தமாகக் கூறுவார்.

**மாணிக்கம்:** இந்தியாவிலும் தமிழ் நாட்டிலும் பலவேறு இனப்பிரிவுகள் உண்டு. அவை யாவும் ஆண்டவரை அறிய வேண்டும்

Dr.**மெக்காவரன்**



என்றே இந்த வசனங்கள் நமக்கு அறைகூவல் கொடுக்கின்றன.

**சாலமோன்:** நானும் அதையே உணருகிறேன். சற்று நேரம் இன்று நாம் நமது இந்திய நாட்டின் இனப்பிரிவுகள் இயேசுவை அறிய ஜெபிப்போமா?

(மூவரும் முழங்கால்படியிட்டு ஊக்கமாக ஜெபித்த பின் விடைபெறுகின்றனர்).

**அடுத்த மாதமும் தொடருவோம்...**

வாலிபர் பகுதி

# வாலிபரே! முடங்கிக் கிடந்தது போதும்!

திரு. சந்தோஷ் கணேசன்

திருமணமான சில நாட்களுக்குள் ரிதன்யா என்ற பெண் தற்கொலை செய்துகொண்டார். அதற்கான காரணம் கணவரும், கணவரின் வீட்டாரும் தன்னை மனரீதியாகவும், உடல்ரீதியாகவும் துன்புறுத்தியதுதான், என்பதோடு, 'எல்லாம் தலைவிதிப்படிதானே நடக்கும், என் தலைவிதி, என்ன பண்ண' என்று கூறியிருந்தார்.

தலைவிதி என்பது 'நம் வாழ்க்கை இப்படித்தான் இருக்க வேண்டுமென்று ஏற்கெனவே முடிவாகியுள்ளது, அதன்படியே நமக்கு நடக்கும், நாம் எதையும் மாற்ற முடியாது' என்று நம்புவதாகும். சில நேரங்களில், கிறிஸ்தவர்களும் இந்த தலைவிதிக் கோட்பாடுகளை நம்புவதை பார்க்க முடிகிறது. கிறிஸ்தவ நம்பிக்கையில் 'தலைவிதி' என்று ஒன்றும் கிடையாது. நம்முடைய கடவுள் ஒவ்வொரு மனிதருக்கும், நன்மையான திட்டமும், நோக்கமும் மட்டுமே வைத்துள்ளார். அதே நேரத்தில், அந்த மனிதர்களுக்குத் தானே சிந்தித்து, தேர்ந்தெடுக்கும்/முடிவெடுக்கும் சுதந்திரத்தையும் (Free will) கொடுத்துள்ளார். (உபா 30:19). சில நேரங்களில் அவருடைய வழியில் நாம் நடக்கும்போதும் நமக்கு சோதனைகளை (Trials) அனுமதிக்கிறார், அதுவும் நம்முடைய நன்மைக்கும், வளர்ச்சிக்குமேயன்றி, தீமைக்கு அல்ல!

**யெப்தாவின் சூழ்நிலை:**

நியாயாதிபதிகள் 11:1ஆவது வசனம் இவ்வாறு சொல்கிறது, 'கீலேயாத்தியனான யெப்தா பலத்த பராக்கிரமசாலியாயிருந்தான்; அவன் பரஸ்திரீயின் குமாரன்; கிலெயாத் அவனைப் பெற்றான்'.



யெப்தா ஒரு பலத்த பராக்கிரமசாலி (brave warrior). பரஸ்திரீயின் குமாரன் (Son of a prostitute), அதைத்தொடர்ந்து 2ஆவது வசனத்தில், 'கிலெயாத்தின் மனைவியும் அவனுக்குக் குமாரர்களைப் பெற்றாள்; அவன் மனைவி பெற்ற மகன்கள் தந்தையின் வீட்டிலிருந்து எந்த சொத்துகளையும் அனுபவிக்க முடியாதபடிக்கு எதிலும் உரிமைக்கொண்டாட முடியாதபடிக்கு யெப்தாவை துரத்திவிடுகிறார்கள், அதுவும் அந்நிய பெண்ணின் மகன் என்று வார்த்தைகளால் காயப்படுத்தி துரத்திவிட்டார்கள். யெப்தா பராக்கிரமசாலியாக இருந்தாலும் அவருடைய சூழ்நிலை, குடும்பப் பின்னணி மோசமாக இருப்பதைப் பார்க்க முடிகிறது.

**யெப்தாவின் மனநிலை:**

நியாயாதிபதிகள் 11:3ஆவது வசனம் இவ்வாறு சொல்கிறது, அப்பொழுது யெப்தா: தன் சகோதரரை விட்டு ஓடிப்போய், தோப் தேசத்திலே குடியிருந்தான்; வீணரான மனுஷர் யெப்தாவோடே கூடிக்கொண்டு, அவனோடேகூட யுத்தத்திற்குப்

போவார்கள். ஒரு பலத்த பராக்கிரமசாலிக்கு ஓடிப்போகுதல் என்பது எவ்வளவு அவமானமான நிலை! அவன் இருந்த ஊர் பெரியவர்களும் சேர்ந்துதான் இவரை துரத்தினார்கள் என்று 7ஆவது வசனம் சொல்கிறது. ஊர்மக்களால் கைவிடப்பட்டு, ஒதுக்கப்பட்டு, எல்லாவற்றையும் இழந்து தனிமையாக்கப்பட்ட பராக்கிரமசாலியான யெப்தாவின் மனநிலை அப்போது எப்படி இருந்திருக்கும்? என்பதை சிந்தித்து பாருங்கள்.

இழிவான வார்த்தைகளால் ஏற்பட்ட மனவேதனை (Torment)

துரத்திவிடப்பட்டு ஓடும்போது பயம் (Fear) மற்றும் பதட்டம் (Anxiety)

குடும்பத்தோடு இல்லாமல் தோப் தேசத்தில் இருந்தபோது தனிமையுணர்வு (Loneliness)

எல்லாவற்றையும் இழந்துபோனதினால் ஏற்பட்டமன அழுத்தம் (Depression)

பராக்கிரமசாலியாக இருந்தாலும் தான் முறையற்ற முறையில் பிறந்தவன் என்று உணரும்போது வரும் தாழ்வு மனப்பான்மை (Inferiority complex).

**யெப்தாவின் மாறிய வாழ்க்கை சூழ்நிலை:**

நியாயாதிபதிகள் 11:8இல் 'அதற்குக் கீலேயாத்தின் மூப்பர் யெப்தாவை நோக்கி: நீ எங்களுடனேகூட வந்து, அம்மோன் புத்திரரோடு யுத்தம்பண்ணி, கீலேயாத்தின் குடிகளாகிய எங்கள் அனைவர்மேலும் தலைவனாயிருக்க வேண்டும்; இதற்காக இப்பொழுது உன்னிடத்தில் வந்தோம் என்றார்கள்'.

எந்த மக்கள் யெப்தாவை துரத்தியடித்தார்களோ, அதே மக்கள் திரும்பவும் அவர்களோடு வரவும், யுத்தம் பண்ணவும், அவர்களுக்கு தலைவனாய் இருக்கவும் கேட்டுக்கொண்டார்கள். யெப்தாவும் அவர்களோடு சென்றதாக வசனம் 11 சொல்கிறது. அதன் பின்பு கர்த்தர் யுத்தத்தில் வெற்றியைக் கொடுத்தார், பின்பு யெப்தா 6 வருடம் இஸ்ரவேல் மக்களை நியாயம் விசாரித்தார் (வழி நடத்தினார் என்ற பொருளும் வரும்) என்று நியாயாதிபதிகள் 12:7ஆம் வசனம் சொல்கிறது.

இவ்வாறு சாதகம் இல்லாத சூழலிலும் மனநிலையிலும் வாழ்ந்த யெப்தாவையே தலைவனாக, நியாயாதிபதியாக ஆண்டவரால் பயன்படுத்த முடியுமானால், பாவத்தின் அடிமைத்தனத்தினால் மூழ்கி அழிந்துபோகும் வாலிபர்கள், மாணவர்கள், உங்கள் நண்பர்களை பரலோகத்தின் பாதையில் வழிநடத்த ஆண்டவர் உங்களையும் பயன்படுத்த முடியும்.

எனவே, சூழ்நிலையைக் காரணம் காட்டி முடங்கிக் கிடந்தது போதும்! இந்திய மக்கள் தொகையில் 70 சதவீதமுள்ள இளைஞர்களின் ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படுவது நீங்கள் முடிவெடுப்பதிலேயே உள்ளது.

**ஒருமுறைகூட நற்செய்தியைக் கேள்விப்பட்டிராத கோடிக்கணக்கான இளைஞர்கள் இருக்கும்போது, ஒவ்வொரு வாரமும் நற்செய்தியை திரும்ப திரும்ப கேட்பதற்கு நமக்கு எந்த உரிமையும் இல்லை. யெப்தாவைப் போல் உங்களை பயன்படுத்த ஆண்டவர் தயாராக இருக்கிறார். நீங்கள் தயாரா? யெப்தாவே, எழுந்து வேலையை ஆரம்பி!**

இக்கட்டுரையை எழுதிய திரு. சந்தோஷ் கணேசன் அவர்கள், நமது அருட்பணியாளர் அருள்திரு. சாமுவேல் கணேசன் அவர்களுடைய மகனாவார். பொறியியல் பட்டதாரியான இவர் தற்போது EU நிறுவனத்தில் அருட்பணியாற்றி வருகிறார்.



## 2025 ஜூலை மாத வேத வினா – விடை போட்டியில் சரியான விடைகள் எழுதியவர்களைப் பாராட்டுகிறோம்.

**மதுரை**
ஷீலா சுரேஷ்
ஞானசிரோன்மணி
பங்கஜம் மார்த்தாண்டம்
மனோகராஜ்
சம்பு ஜெயச்சந்திரன்
ரஜினி பியூலா ஷோபிகா
அருள்மொழி ஜான்சன்
கலா செல்வகுமாரி
ஆசீர்வாதம்
ஜெர்லி இம்மானுவேல்
சுசீலா ஆபிரகாம்
தெல்மா ஸ்டான்லி
ஹேமலதா வில்சன்
ராணி ஸ்டான்லி பால்
ஜெமி ஸ்டீபன்
ரத்னாபாய் ஜேசுதாசன்

**கன்னியாகுமரி**
டெய்ஸி டேவிட்
செல்வராஜ்
தேவசகாயம்
லில்லி புஷ்பம்
பிராகரன்ஸ் தங்கராஜ்
பமீலா எட்வின்
பிரேமா ஜெரால்டு
மோகன் சி கமலம்
டேவிட்சன்
ஜெபஜோதிபாய்
ரெத்தினா ராஜ்குமார்
ரோஹிணி ஜேசன்
கிறிஸ்டாபெல் ஜெயந்தி
எப்சிபா நசல்
டேவிட் மனோகர்
லலிதா ஜாஸ்பர்

**திருநெல்வேலி**
ஜெபா நியூட்டன்
சந்திரலீலா திரவியம்
வயலட் கிறிஸ்டோபர்
மார்கிரெட் பியூலா
செல்வராஜ்
ஜெயசிங்
ஹெலன் ரோஸ் ஜீவன்தாஸ்
அன்பு சுதந்திரம்
ரூபி செல்வராணி
லதா
வசந்தா பாலசேகரன்
கஸ்தூரி எலியாஸ்
வில்லியம் பிரெடெரிக்
சாந்தி ராஜன்
ரோஷிணி ஜோசப் பீட்டர்
ஜேன் தர்மராஜ்
செல்வராஜ்
செல்வி பொன்னரசி
ஜாஸ்மின் டெல்பியா
ஜெனிபர் சில்வியா
சந்திரா தாமஸ்
ரெஜினா சாலமோன்
பெட்ரிசியா ஜஸ்டஸ்
ரூத் ஜெயராணி அன்புராஜ்
கிரேஸ் அகஸ்டின்
ரஜூலா செல்வின்
சுந்தரி ஸ்டீபன்
ஞானசுந்தரி நாகராஜன்
கிளாடிஸ் ராஜையா
தாமஸ்
பாக்கியம்
சந்திரபோஸ்
ஜெயகுமார் காலேப்
ஜெபக்குட்டி மோசஸ்
விஜயவல்லி ஜான்

**தூத்துக்குடி**
அந்தோணியம்மாள்
லீலா டேவிட்சன்
சக்குபாய்
சாந்தகுமாரி
ரேச்சல் தவமணி
ஞானமணி ஹெப்சிபா
ஜோதிமணி வில்சன்
தியாகராஜன்
அசோக்குமார் பிரின்ஸ்
ஹெலன் திலக்
குளோரி செல்வராஜ்
கிருபாசனம் ரெமீஜீயஸ்
ஆதிசிரோன்மணி ஞானதீபம்
ரூபவல்யா
ஆலீஸ் குணசீலி
அன்னத்தாய் ஆல்பர்ட்
ஷேபா கோயில்பிச்சை
சுகிர்தவல்லி
பொன்னுசாமி
ரெத்னாவதி முத்துராஜ்
பாக்கியராஜ்
சேசம்மாள் தேவசகாயம்
தேவமணி ஆபிரகாம்
ரெத்னாம்பாள் ஈஸ்டர்ராஜ்
சுசீலா
ஆனி இன்பநாயகம்
புனிதா சாமுவேல்
சந்திரா ஜெயராஜ்
ஜாய்ஸ் ஜான்சன்
பாத்திமா அன்னபாக்கியம்
எஸ்தர்

**சென்னை**
ஜெயமேரி சந்திரசேகரன்
கிரேஸ் தங்கதுரை
கனகா வேணுகோபால்
ஹெப்சிபா தாமஸ்
சாந்தி டென்னிசன்
ஷீலா சேகர்
துரைராஜ்
சைமன் கலைச்சந்திரன்
கரோலின் ராஜகுமாரி
செலின் ராணி டேவிட்
அன்னாள் ஜான்
டேவிட் ஜெயகுமார்
யூனிஸ் ரிச்சர்ட்
ஜோன் தேவநாயகம்

**செங்கல்பட்டு**
கருணாகரன் ஆனந்தி
ஜரீன் லீனா

**திருச்சி**
திலீப்குமார்
தேவகிருபை
பேபி சுசீலாபாய்
ஜெபமணி டேவிட்
டேவிட்
லில்லியன் ஜோசப்
சிசிலியா ஜெயபிரகாஷ்
டிக்ஸி ஆல்பர்ட்

**கோயம்புத்தூர்**
அருணோதயம் வில்லியம்
அன்பு கமலம்
கிறிஸ்டிபாய் வாசன்
ஜான்சி காமராஜ்
வசந்த மல்லிகா

**தேனி**
பொன்ராணி அன்புநாதன்
மாலா வில்சன்
நேசமணி சாமுவேல்
எலிசபெத் பால்ராஜ்
சுசீலா ஜான்
சுசீலா
ஜாய்ஸ் தேவராஜ்

**புதுக்கோட்டை**
சாந்தி வில்லியம்

**தஞ்சாவூர்**
சாந்தி குணசேகரன்
பிரமீளா செல்வம்
குணசீலி ஸ்டீபன்
சிந்தியா ஜாஷ்வா
ரோஸ்லின் செல்வராணி
ராணி பாண்டியன்

**சிவகெங்கை**
பாலின் மார்டின்
லலிதா பெவின்சன்

**ஈரோடு**
சரோஜினி துரைராஜ்
ஜெயகுமாரி
ரூத் நேசமணி
பென்னி

**பெங்களூரு**
டாரத்தி சாந்தகுமாரி
சில்வியா ராஜகுமாரி
சாந்தி கிறிஸ்டோபர்
லதா கிரேஸ்
சூர்யா ரிச்சர்ட்சன்
பால்ராஜ்

**நீலகிரி**
ஸ்வீட்டி மைக்கேல்
ஜெரில்டா

**சேலம்**
இவாஞ்சலின் ஜோன்ஸ்
ரோலண்ட் அருள்ராஜ்
பழனியம்மாள் சாமிநாதன்

**பாண்டிச்சேரி**
பியூலா ஜெசுராஜன்

**திருப்பூர்**
கனகசத்தியவதி

**திண்டுக்கல்**
கெத்ஸி எலிசபெத்
சாமுவேல்ராஜ்
குளோரி மனோகர்
பால் சின்னத்தம்பி

**விருதுநகர்**
ஞானசெல்வம்
பிளாரன்ஸ் ராஜமோகன்
பொன்னுத்தாய் ராஜேந்திரன்

**வேலூர்**
மெர்ஸி புளோரா

**கள்ளக்குறிச்சி**
வசந்தா செல்வராஜ்

**பெரம்பலூர்**
சுகந்தகுமாரி

**மும்பை**
லீலா ஏர்னஸ்ட்

# வேத வினாக்கள்

## ஆகஸ்ட் - 2025

**( யோவான்: 15 முதல் 21 அதிகாரங்கள் வரை)**

**பொருத்துக**

1. திதிமு – கபாலஸ்தலம்
2. ரபூனி – சாட்சி
3. கொல்கொதா – சத்தியம்
4. வசனம் – போதகரே
5. ஆதிமுதல் – தோமா

**கோடிட்ட இடங்களை நிரப்புக**

1. உலகத்தில் உங்களுக்கு ..... உண்டு, ஆனாலும் ..... நான் உலகத்தை .....
2. அவர்கள் ..... வந்திறங்கினபோது ..... போட்டிருக்கிறதையும் அதின்மேல் ..... வைத்திருக்கிறதையும் ..... கண்டார்கள்.
3. அவர் ..... அறையப்பட்ட இடத்தில் ஒரு ..... அந்தத் தோட்டத்தில் ஒருக்காலும் ஒருவனும் வைக்கப்பட்டிராத ஒரு ..... இருந்தது.
4. நீங்கள் ..... கொடுப்பதினால் என் பிதா ..... எனக்கும் .....
5. ..... தம்முடைய சீஷருடனே கூட ..... என்னும் ..... அப்புறம் போனார். அங்கே ஒரு ..... இருந்தது.

**விடை எழுதுக**

1. தேற்றரவாளன் எவைகளைக் குறித்து உலகத்தை கண்டித்து உணர்த்துவார்?
2. எது நித்திய ஜீவன் ?
3. எப்போது என் சிநேகிதராயிருப்பீர்கள் என்று இயேசு கூறுகிறார்?
4. காய்பா சொன்ன ஆலோசனை என்ன?
5. 'இவனிடத்தில் ஒரு குற்றமும் காணேன்' யார் யாரிடம் கூறியது?

**தொகுப்பு:** Mrs. **மெர்சி கிறிஸ்டோபர்,** *சென்னை.*

- விடைகளுடன், வேத ஆதாரங்களையும் எழுதுங்கள்.
- விடைகளை அஞ்சல் அட்டையில் எழுதக்கூடாது.
- வினா எண்ணைக் குறிப்பிட்டு, பதில்களை மட்டும் எழுதுங்கள்.
- வளரும் விண்ணரசு இதழின் சந்தா எண் மற்றும் அலைபேசி எண்ணுடன், உங்கள் **முழு முகவரியையும்** எழுதுங்கள்.
- சரியான விடை எழுதியவர்கள் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**வேதவினா–விடை, வளரும் விண்ணரசு,**
**58/1, முத்தாலம்மன் கோவில் தெரு,**
**சேலையூர், சென்னை – 600 073.**
**9003916480**

**உங்களது விடைகள் எங்களுக்கு வந்துசேர கடைசி நாள் இம்மாதம் 20ஆம் தேதி**

**ஜுலை மாத வேதவினா–விடை போட்டியில் பரிசு பெற்றவர்களைப் பாராட்டி வாழ்த்துகிறோம்!**

1. திருமதி. ரெத்னாம்பாள் ஈஸ்டர்ராஜ் – தூத்துக்குடி
2. திருமதி. சாந்தி குணசேகரன் – தஞ்சாவூர்
3. திருமதி. ஜெயமேரி சந்திரசேகரன் – சென்னை

# நடப்புச் செய்திகள்

**புதுடெல்லி:** இந்தியாவின் பிரம்மோஸ் ஏவுகணைகளை வாங்க 17-க்கும் மேற்பட்ட நாடுகள் விருப்பம் தெரிவித்துள்ளன. இந்தியாவும் ரஷ்யாவும் இணைந்து சூப்பர்சானிக் ஏவுகணைகளை தயாரிக்க கடந்த 1998-ம் ஆண்டு ஒப்பந்தம் செய்தன. இந்தியாவின் பிரம்மபுத்திரா நதி (Brahmaputra), ரஷ்யாவின் மோஸ்க்வா (Moskva) நதிகளின் பெயர்களில் இருந்து புதிய சூப்பர்சானிக் ஏவுகணைக்கு பிரம்மோஸ் (BrahMos) என்று பெயரிடப்பட்டது. நீர், நிலம், வான் பரப்பில் இருந்து பிரம்மோஸ் ஏவுகணைகளை ஏவ முடியும். கடந்த 2005-ம் ஆண்டில் கடற்படை, 2007-ம் ஆண்டில் ராணுவம், 2020-ம் ஆண்டில் விமானப்படையில் பிரம்மோஸ் சேர்க்கப்பட்டது. 28 அடி நீளம், 2 அடி விட்டம், 3,000 கிலோ எடை கொண்ட பிரம்மோஸ் ஏவுகணை, ஒலியைவிட 3.5 மடங்கு வேகத்தில் சீறிப் பாயக் கூடியது. 300 கிலோ வெடிகுண்டுகளை சுமந்து செல்லும் திறன் கொண்டது. இந்த ஏவுகணையின் வேகம், சீறிப் பாயும் தொலைவு தொடர்ந்து மேம்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது பிரம்மோஸ் ஏவுகணை 500 கி.மீ. வரையிலான இலக்குகளை துல்லியமாக தாக்கி அழிக்கிறது. இந்த ஆண்டு தொடக்கத்தில் 800 கி.மீ. தொலைவு தாக்கும் பிரம்மோஸ் ஏவுகணை வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டது. தற்போது 17-க்கும் மேற்பட்ட நாடுகள் பிரம்மோஸ் ஏவுகணைகளை வாங்க விருப்பம் தெரிவித்துள்ளன.

**புதுச்சேரி:** புதுச்சேரி கடற்கரையில் போலீஸாருக்கு உதவியாக முதல்முறையாக ரோந்து பணியில் விரைவில் ரோபோ ஈடுபடுத்தப்படவுள்ளது. அதிகாரிகள் முன்னிலையில் செயல்விளக்கம் நடந்த நிலையில், குறைகளை களைந்தபின் நடைமுறைக்கு வரவுள்ளது. இந்த ரோபோவில் நவீன கேமரா பொருத்தப்பட்டுள்ளது. ரோபோ தானாகவே சென்று கண்காணிக்கும். கடற்கரையில் குற்ற செயல்களில் ஈடுபடுபவர்கள், மது அருந்துபவர்கள், தடையை மீறி குளிப்பவர்களை படம் பிடித்து கட்டுப்பாட்டு அறைக்கு அனுப்பும் வகையில் வடிவமைக்கப்பட்டு வருகிறது. இந்தியாவில் முதல்முறையாக புதுவையில் ரோந்து பணிக்கு ரோபோ பயன்படுத்தப்பட உள்ளதாக தனியார் நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர்.

**புதுடெல்லி:** "அதிகரித்து வரும் சில்லரை டிஜிட்டல் பணம் செலுத்துதல்: இணக்கமாக செயல்படுத்துவதின் மதிப்பு" என்ற தலைப்பில் சர்வதேச நிதியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியதாவது: யுபிஐ மூலம் பணம் செலுத்தும் முறையை நேஷனல் பேமென்ட்ஸ் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா (என்பிசிஐ) கடந்த 2016-ம் ஆண்டு தொடங்கியது. இத்தளம் ஏராளமான வங்கி கணக்குகளை ஒரு செல்போன் செயலி மூலம் இணைக்க அனுமதிக்கிறது. இதன் மூலம் குறைந்த செலவில் எளிதாக, உடனடியாக, பாதுகாப்பான முறையில் பண பரிமாற்றம் நடைபெறுகிறது. இந்தியாவை தாண்டி ஐக்கிய அரபு எமிரேட்ஸ், சிங்கப்பூர், பூட்டான், நேபாளம், இலங்கை, பிரான்ஸ் மற்றும் மொரிசீயஸ் ஆகிய நாடுகளில் யுபிஐ விரிவடைந்துள்ளது. ஐரோப்பாவில், பிரான்ஸ் நாட்டில் முதல் முறையாக யுபிஐ அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இது வெளிநாடு செல்லும் இந்தியர்களுக்கும், வெளிநாடுகளில் வசிக்கும் இந்தியர்களுக்கும் பணம் செலுத்தும் முறையை எளிதாக்கியுள்ளது. இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**சென்னை:** பெரம்பூர் ரயில் நிலையத்தை ரூ.360 கோடி மதிப்பில் 4-வது முனையமாக மாற்றவும், பெரம்பூர் - அம்பத்தூர் இடையே 6.4 கி.மீ. தொலைவுக்கு 5,6-வது புதிய பாதைகள் அமைக்கவும், ரயில்வே வாரியம் ஒப்புதல் அளித்துள்ளது. சென்னை சென்ட்ரல், எழும்பூர், தாம்பரம் ஆகிய ரயில் நிலையங்களில், பயணிகள் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில், கூடுதல் ரயில்களை இயக்க வசதியாக, பெரம்பூர் ரயில் நிலையத்தை புதிய ரயில் முனையமாக மாற்ற முடிவு செய்யப்பட்டுள்ளது.

**சென்னை:** புதிய மின் இணைப்பு, பெயர் மாற்றம், மீட்டர் வாடகை உள்ளிட்ட பல்வேறு சேவைகளுக்கான கட்டணம் 3.16 சதவீதம் உயர்த்தப்பட்டுள்ளது. தமிழகத்தில் கடந்த ஜூலை 1-ம் தேதி முதல் மின் கட்டணம் 3.16 சதவீதம் உயர்த்தப்பட்டுள்ளது. மின் கட்டணம் உயர்த்தப்பட்டாலும், அனைத்து வீட்டு மின் இணைப்புகளுக்கான கட்டணத்தை அரசே ஏற்று, மின் வாரியத்துக்கு மானியமாக வழங்கும் என அறிவிக்கப்பட்டது. இந்நிலையில், புதிய மின் இணைப்பு, மின் இணைப்புக்கான பெயர் மாற்றம் உள்ளிட்ட சேவைகளுக்கான கட்டணங்கள் உயர்த்தப்பட்டுள்ளன. மின் பயன்பாட்டுக் கட்டணம் மட்டுமின்றி, பல்வகை சேவை கட்டணங்களையும் மின்சார ஒழுங்குமுறை ஆணையம் 3.16 சதவீதம் உயர்த்தி உத்தரவிட்டது. இந்நிலையில், ஜூலை 1-ம் தேதிக்கு முன் பெறப்பட்ட விண்ணப்பங்களுக்கு பழைய சேவைக் கட்டணமும், 1-ம் தேதிக்கு பின் பெறப்பட்ட விண்ணப்பங்களுக்கு உயர்த்தப்பட்ட மின் வாரிய சேவைக் கட்டணங்களும் வசூலிக்க மின் வாரியம் உத்தரவிட்டுள்ளது.

நன்றி: தி இந்து தமிழ் திசை (20&21/07/2025)

# அருட்பணியாளர்களுக்கு இருசக்கரவாகனம் தேவை

ஆகஸ்ட் 2025.

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களுக்கு,

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துகள்.

இந்திய திருச்சபை வளர்ச்சி மிஷனின் அருட்பணிகளை நமது தாங்குவோரிடம் கூறி, அவர்களிடம் ஜெபம் மற்றும் பொருளாதரவைப் பெறுவதற்காக, நமது தரிசனம் பரப்பும் அருட்பணியாளர்கள் அருட்பணி செய்து கொண்டிருக்கிறார்கள்.

இதற்காக நமது தரிசனம் பரப்பும் அருட்பணியாளர்கள் தினமும் அதிக தூரம் இருசக்கர வாகனத்தில் பயணிக்கிறார்கள். இதன் காரணமாக, இரு சக்கர வாகனங்கள் விரைவாகவே பழுதுபடுவதால், அதன் பராமரிப்பு செலவு அதிகமாகிறது.

தினமும் அதிகமான கி.மீட்டர்கள் வாகனத்தை பயன்படுத்துவதால், விரைவிலேயே இரு சக்கர வாகனத்தினர் நிர்ணயித்துள்ள அதிகபட்ச கி.மீட்டர்களை வாகனம் அடைந்துவிடுகிறது. அதன் காரணமாக, வாகனம் பயன்படுத்தும் பெட்ரோலின் அளவும் அதிகரிக்கிறது. அதுமட்டுமல்லாமல், நமது பணித்தள அருட்பணியாளர்களும் இரு சக்கர வாகனங்களை நீண்ட தூரத்திற்குப் பயன்படுத்துகின்றனர்.



தரிசனம் பரப்புவோர் மற்றும் பணித்தள அருட்பணியாளர்கள் ஆகிய இருவருக்கும் சேர்த்து, மொத்தம் 11 வாகனங்கள் வாங்க வேண்டியுள்ளது. ஒரு வாகனத்தின் விலை ரூ.1,25,000/- ஆகும்.

நமது அருட்பணிகள் தொய்வின்றி நடைபெற, அருட்பணியை ஆதரிக்கும் உங்களுடைய ஜெப மற்றும் பொருள் ஆதரவை நாடுகிறோம். இதற்கென்று ஜெபித்து, உங்கள் குடும்பத்தின் சார்பாகவோ, நண்பர்களாகவோ, ஐக்கியமாகவோ இரு சக்கர வாகனத்தை வாங்கிக்கொடுத்து, அருட்பணியைத் தாங்க அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தேவன்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.

கிறிஸ்துவின் பணியில்
அருள்திரு.அ. லெஸ்லி நாகராஜன்,
பொதுச்சேவகர்

**நமது தேவை ரூ.13.75 இலட்சம்.**

**Account Name : INDIA CHURCH GROWTH MISSION**
**Account Number : 10143136773**
**Bank : State Bank of India**
**Branch Name : Selaiyur, Chennai- 600073**
**IFSC Code : SBIN0007948**

icgm1014@sbi

ICGM

Registered with RNI Under No:TNTAM/2000/01585
Postal Registration No: TN/MA/42/2024-2026 WPP No: TN/WPP-20/SR/2024-2026
Posted at BPC Madurai - 625 001.
Date of publishing: 28th July 2025 Date of posting - 28,29 & 30th July 2025.
Printed by Mr.S.Gunasekaran and Published by Mr.D. Thirugnanam on behalf of Irai Arasu Trust and printed at Sharon Print System, No:51/71, Ahimsapuram First Street, Near Saraswathi Theatre, Sellur, Madurai-625002 and Published at Nagamalai Pudur, Palkalai Nagar, Madurai-625021, Editor Mr.G. Ponnuraj.

## பொதுச்சேவகரிடமிருந்து... தொடர்ச்சி...

அருள்திரு. சார்லஸ் தேவநேசன் அவர்களுக்கு ICGM சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். அன்று மாலை, செல்லப்பம்பாளையும் (ICGM) ஆலயத்தில் நடைபெற்ற வாலிபர்களுக்கான சிறப்புக் கூடுகையிலும் தேவ செய்தி அளித்தேன்.

திருச்சி BHEL–இல் உள்ள சிஎஸ்ஐ என் மீட்பர் தேவாலயத்தில் ஜுலை 27ஆம் தேதி அருட்பணி ஊழிய பாரத்தையும், தேவ செய்தியையும் பகிர்ந்து கொள்ளக் கர்த்தர் உதவி செய்தார். இந்த வாய்ப்பை அளித்த சபை போதகர் அருள்திரு. பிரபாகரன் அவர்களுக்கு மனமார்ந்த நன்றிகள்.

சுயசார்பு திருச்சபைகள் பற்றிய ஆய்வுக் கூட்டம் 27ஆம் தேதி வாடிப்பட்டியில் நடைபெற்றது.

ஆகஸ்ட் 8–9 ஆகிய தேதிகளில் இந்திய திருச்சபை வளர்ச்சி மிஷனின் பொதுக்குழுக் கூடுகை தாம்பரத்தில் நடைபெறவுள்ளது. அதில் எடுக்கப்படும் தீர்மானங்கள் தேவ சித்தத்தின்படி அமைந்து, ஊழிய வளர்ச்சிக்குப் பயன்பட ஜெபியுங்கள்.

தரிசனம் பரப்பும் ஊழியர்கள் அதிக தூரம் இரண்டு சக்கர வாகனங்களில் தினசரி பயணம் செய்வதால், வாகனங்கள் வெகு சீக்கிரமே பழுது அடைந்து விடுகின்றன. அதற்குரிய பராமரிப்புச் செலவும் அதிகமாகி விடுகின்றது. தற்போது, பணித்தள ஊழியர்கள் மற்றும் தரிசனம் பரப்பும் ஊழியர்கள் ஆகியோருக்கு 11 இருசக்கர வாகனங்கள் அவசரமாகத் தேவைப்படுகின்றன. ஒரு வாகனத்தின் விலை ரூ. 1,25,000/–. இதற்காக ஜெபியுங்கள்; ஊழியத்தைத் தாங்குங்கள்.

தேவகிருபை உங்களோடு இருப்பதாக!

கிறிஸ்துவின் சீடராக்கும் பணியில்,
அருள்திரு.அ. லெஸ்லி நாகராஜன்,
பொதுச்சேவகர்.

If undelivered, please return to:

Valarum Vinnarasu, No.58/1. Muthalamman Koil Street,
Selaiyur, Chennai - 600 073. Tamilnadu.
Cell : 9442150482.

icgm1014@sbi

ICGM

To: